**SURESH' IAS ACADEMY**

ARISE AWAKE ACHIEVE



# TARGETING TNPSC GROUP-II 2023

## 12th தேர்வு

Marks : 300
Time : 3 Hrs

## QUESTION WITH SIMPLIFIED ANSWER

## MAINS WRITTEN EXAM

## மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிர்வாகம்

## முழுத்தேர்வு

தமிழ் வழி

| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
|---|---|---|---|---|
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 75503 52916 | 0452 - 2383777 | 97555 52003 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52917 | 98431 10566 | 97555 52009 |

TEST 12 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு - 1

**1) பீட்டர் செல்ப் என்பவரின் கருத்தின்படி அரசியல்வாதிகளுக்கும் மற்றும் அரசு நிர்வாகிகளுக்குமிடையே ஏற்படும் பரிமாற்றத்திலிருக்கும் நான்கு முக்கிய பகுதிகளைக் கூறுக.**

**பீட்டர்செல்ப்** 1

- பொது நிர்வாகம் பற்றிய படிப்பு அரசியல் அறிவியலுக்கு அப்பாற்பட்டது.
- அரசியல்வாதிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு உறவு என்பது ஆட்சி செயல்பாடுகளை அறிய மற்றும் பொது நிர்வாக நடைமுறையில் வாதத்திற்கு உரிய ஒரு நடவடிக்கையாகும்.

**உறவுக்கான பகுதிகள்** 4

- நிதியியல் பகுதிகள்
- சட்டம்
- கொள்கை மேற்கொள்ளுதல்
- சட்டசபை வழிமுறைகள்

**கண்ணோட்டம்** 1

- அரசியல்வாதிகள் நிர்வாக அமைப்புகளுக்கான ஒரு முதன்மையான கட்டுப்பாட்டாளர்கள் ஆவர்.
- குறிப்பாக வெஸ்ட் மினிஸ்டர் அமைப்பைக் கொண்ட அரசு (பிரிட்டன்)

**2) வட்டார வளர்ச்சி அலுவலரின் பங்கு மற்றும் பணிகள் யாவை?**

**வட்டார வளர்ச்சி அலுவலர்** 3

- இவர் வட்டார அலுவலகத்தின் தலைமையாக விளங்குகிறார்.
- திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மற்றும் வட்டார அளவில் நடைமுறையில் உள்ள திட்டங்கள் ஆகியவற்றில் மக்களின் பங்களிப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார்.

**வட்டார வளர்ச்சி அலுவலரின் பங்குகள்**

- அரசால் வழங்கப்பட்ட திட்டங்களை வட்டார நிர்வாக அமைப்பில் இருந்து தணிக்கை செய்கிறார்.
- கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் ஆகியவற்றை பஞ்சாயத்து சார்பாக அனுமதி அளிக்கும் பொறுப்பினை ஏற்கிறார்
- பஞ்சாயத்து சமிதி நிதியிலிருந்து பணப்பரிமாற்றம் செய்வதற்கான பொறுப்பினை ஏற்கிறார்.
- பஞ்சாயத்து சமிதியால் மேற்கொள்ளப்பட்ட வரி மற்றும் கடன் செலுத்துதலை சீராய்வு செய்கிறார்.
- மற்ற பணியாளர்களை பஞ்சாயத்து சமிதியில் மேற்பார்வை செய்வதற்கு பதிலாக தானே ஒரு பொறுப்பான இடத்திலிருந்து செயல்படுகிறார்.
- ஆண்டறிக்கையுடன் பஞ்சாயத்து சமிதி நிதி அறிக்கைகளையும் சமர்ப்பிக்கிறார்.
- பஞ்சாயத்து அமைப்பில் திருட்டு உள்ளிட்ட குற்றங்களை புகார் செய்யும் பொறுப்பினை வகிக்கிறார்.

**செயல்பாடுகள்** 3

**ஒரு நிர்வாக செயல்பாட்டு அதிகாரியாக**

- அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை திறம்பட நடைமுறைப்படுத்துதல்
- பஞ்சாயத்து சமிதியின் ஒரு அங்கமாக கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்கிறார்.

**ஒரு வட்டார அலுவலகத்தின் தலைமையாக :**

- பஞ்சாயத்து சமிதியில் பணிபுரியும் அதிகாரிகள், மாற்றுப்பணி பெற்று வந்த அதிகாரிகள், வரி, நிதி மற்றும் நிர்வாகத்திற்காக ஏற்படுத்தப்பட்ட நிலைக்குழுக்கள் உள்ளிட்ட அத்தனைப் பணியாளர்களையும் மேற்பார்வை செய்கிறார்.

**ஒரு செயலாளராக :**

- குழுக்களின் தலைமை மற்றும் பிரதான் ஆகியவற்றின் வழிமுறைகளை பின்பற்றி பஞ்சாயத்து சமிதிகளுக்கு மற்றும் நிலைக்குழுக்களுக்கு கூட்டுக்கூட்டங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறார்.

**3) சப்ரு அறிக்கை 1945இன் முக்கியத்துவத்தைத் தருக.**

**சப்ரு அறிக்கை (1945)** 1

- தேஜ்பகதூர் சப்ரு : சுதந்திரப் போராட்ட வீரர், வக்கீல் மற்றும் மூத்த காங்கிரஸ் உறுப்பினர்
- தலைமை : டிபி சப்ரு
- அறிக்கை : 1945

**அம்சங்கள்** 5

- இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்று இரு பிரிவுகளாக பிரிப்பதற்கு வழங்கப்பட்ட முன்மொழிவினை நிராகரித்தார்.
- தாழ்த்தப்பட்டோர்களுக்கான பாதுகாப்பினை பரிந்துரைத்தார்.

- தாழ்த்தப்பட்டவர்களுக்கான அரசியல் மற்றும் குடிமை உரிமைகளை உருவாக்கினார்.-

  சப்ரு அறிக்கையால் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு என்று அழைக்கப்பட்டது.
- ஆட்சி மற்றும் இந்திய அரசியல் சார்ந்த அரசியலமைப்பு கேள்விகளுக்கு 21 பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது.
- அரசியலமைப்பின்மீது வரைவு மேற்கொள்ளப்படுவதாக அங்கீகரிக்கப்பட்டது.

**4) நீதித்துறை முனைப்பு பற்றி வரையறு மற்றும் அதன் நிறை & குறைகளை குறிப்பிடுக.**

**<u>நீதித்துறை முனைப்பு</u>** 2

- அரசியலமைப்பை பின்பற்றுவதற்கு பதிலாக ஒரு பொதுக்கொள்கையை தங்களது கண்ணோட்டத்தின் அடிப்படையில் நீதிபதிகள் பின்பற்றுவதை விளக்குகிறது.
- ஒரு குடிமகனின் உரிமை மற்றும் சமூக நீதியை பாதுகாக்கும் முயற்சியில் அரசியலமைப்பைக் கடந்து ஒரு நியாயமான நடைமுறையை நீதித்துறை முனைப்பு என்கிறோம்.
- இது ஒரு அரசின் மற்றொரு உறுப்பான சட்டமன்றம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை முடுக்கிவிட்டு அவர்களது அரசியலமைப்பு கடமைகளை நிறைவேற்றுகிறது.

**<u>நீதித்துறை முனைப்பு - பல்வேறு முறைகள்</u>**

- நீதித்துறை மறுசீராய்வு
- பொது விருப்ப வழக்கு
- அரசியலமைப்பு விளக்கம்
- அரசியலமைப்பு உரிமைகளை உறுதிசெய்வதற்கான ஒரு சர்வதேச மாதிரி
- உயர்மட்ட நீதிமன்றங்களின் மேற்பார்வை அதிகாரம் கொண்டு வட்டார நீதிமன்றங்களை பார்வையிடுதல்

**<u>அரசியலமைப்பு முன்னேற்பாடுகள்</u>**

- விதி 13, 32 மற்றும் 226

**<u>நன்மைகள்</u>** 2

- அரசின் இதர துறைகளை பரிசோதனை மற்றும் சமநிலையை உறுதிப்படுத்துகிறது.
- சட்டத்தின் வாயிலாக பின்னடைவு ஏற்படும்பொழுது நீதிபதி தங்களுடைய சொந்த கண்ணோட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்.
- குறிப்பிட்ட சட்டம் திருப்தி அளிக்காத பொழுது நீதிபதிகள் அதற்கு எதிராக குரல் எழுப்பலாம்.
- சட்ட அமைப்பு மற்றும் நீதிபதிகளின் மீதான நம்பிக்கையை அதிகப்படுத்துகிறது.

**<u>தீமைகள்</u>** 2

- நடைமுறையில் உள்ள சட்டத்தின் மீதான தீர்ப்புகளை நீதிபதிகள் வழங்கலாம்.
- மற்ற வழக்குகளை தீர்மானிப்பதற்கு நீதிபதியின் தனிக்கருத்துக்கள் பின்பற்றப்படுகிறது.
- சுயநலம் காரணமாக மற்றும் சொந்த பிரச்சினைகள் காரணமாக தீர்ப்புகள் மாற்றப்படலாம்.
- நீதிமன்ற மறுசீராய்வு என்பது அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு அடிப்படை கட்டமைப்பாகும்.
- நீதிமன்றங்கள் ஒரு சட்டத்தின் வாழ்நாளை கணக்கில் கொள்ளலாம். ஆனால் ஒரு புதிய சட்டத்தை இயற்ற முடியாது.

**5) நகராட்சியின் வருவாய்க்கான வரி சாராத ஆதாரங்கள் யாவை?**

**<u>வரிசாராத வருவாய்</u>** 1

- நிதி மூலங்கள் மற்றும் மற்ற வரிகள் மூலம் இந்த வருவாய் ஈட்டப்படுகிறது.
- பொதுமக்களுக்கு வரி விதிப்பதன் மூலம் ஈட்டப்படும் வருவாய் கணக்கில் கொள்ளப்படுவதில்லை.

**<u>உதாரணங்கள்</u>** 1

- வட்டி
- மின்விநியோகத்திற்கான கட்டணம்
- உரிமங்களுக்கான கட்டணம்
- அபராதங்கள்
- உரிமையாளர் அல்லாத சொத்துக்கள்

**<u>நகராட்சி அமைப்புகளின் வரி அல்லாத வருவாய் மூலங்கள்</u>** 4

**<u>வரி அல்லாத வருவாய் மீதான ரசீதுகள்</u>**

- பயனாளர் கட்டணங்கள், நகராட்சி கட்டணம், விற்பனை மற்றும் வாடகை கட்டணங்கள், குத்தகை தொகைகள், இதர ரசீதுகள், காலாவதியான வைப்புகள், கட்டணங்கள்,அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள்
- உபகரணங்களின் வாடகை மற்றும் இதர விற்பனைகள்

**<u>பகிரப்பட்ட வருவாய்</u>**

- கேளிக்கை வரி, முத்திரைத்தாள் வரி, தொழில்வரி, மோட்டார் வாகன வரி

1. பல்வேறு திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் மூலம் மத்திய அரசால் பரிமாற்றப்பட்ட மானியங்களை பெற்றுத்தருகிறது.
2. வருவாய் இழப்பு மற்றும் குறிப்பிட்ட பரிமாற்றங்களுக்கான இழப்புகளை திட்டமிடப்படாத மானியங்கள் மூலம் சமன்செய்கிறது.

**<u>கடன்கள்</u>**

- முதலீட்டு வேலைகளுக்கான வட்டார அதிகாரிகளால் பெறப்பட்ட கடன்களை விவரிக்கிறது.
- எல்ஐசி, மத்திய மற்றும் மாநில அரசு, வங்கி மற்றும் நகராட்சி பத்திரங்கள்

**6) அரசியலமைப்பு இணைப்புச் சட்டமியற்றல் என்றால் என்ன? அதன் வகைகளைத் தருக.**

**<u>அரசியல் அமைப்பு இணைப்பு சட்டமியற்றுதல்</u>** 3

- பிரதிநிதித்துவ சட்டம் நிர்வாக சட்டங்களின் கீழ் இயற்றப்படுகிறது.

SURESH

- முதன்மை சட்டங்களுக்குத் தேவையான கூறுகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு நிர்வாக அதிகாரத்தால் ஏற்படுத்தப்படும் சட்டமாகும்.
- பிரதிநிதித்துவ சட்டம் என்பது ஒரு அடுத்த நிலை சட்டம் என்று அழைக்கப்படுகிறது.
- பாராளுமன்றம் அல்லாத தனி ஒரு மனிதன் அல்லது அமைப்பால் இயற்றப்படும் சட்டம் ஆகும்.
- பாராளுமன்ற திருத்தச் சட்டத்தின் மூலம் ஒரு தனிமனிதர்கள் அல்லது அமைப்பு சட்ட உருவாக்கப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பிரதிநிதித்துவ சட்டத்தின் வகைகள்** 3

- சட்டரீதியான உபகரணங்கள்
- முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்
- சட்டங்கள்
- சபைகளின் ஆணைகள்
- சிறப்பு அல்லது நெருக்கடி நிலை ஆணைகள்
- நீதிமன்ற முடிவுகள்

**7) a) B2B அமைப்பு என்றால் என்ன?**

**b) அரசின் ஏதேனும் மூன்று பயன்களை உதாரணத்துடன் பட்டியலிடுக.**

**a) வணிகத்திலிருந்து வணிகம் (B2B)** 3

- இம்முறையில் பரிமாற்றம் இரு நிறுவனங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படுகிறது.
- இதில் வாடிக்கையாளர் எவ்விதத்திலும் தலையிடுவதில்லை.
- வலைதள பரிமாற்றங்கள் மட்டுமே உற்பத்தியாளர்கள். மொத்த விற்பனையாளர்கள் ஆகியோர்களுக்கு இடையே மேற்கொள்ளப்படுகிறது.

**இத்தளத்திற்கான உதாரணங்கள்**

- இந்தியாமார்ட் : பணம் செலுத்தும் சேவைகள் மற்றும் வணிகத்திற்கான ஒரு தளமாகும்.
- உதான் : உற்பத்தியாளர்கள் மற்றும் சில்லரை வியாபாரிகளுக்கு இடையிலான மின்உபகரணங்கள், துணிகள் உள்ளிட்ட பொருட்களின் விற்பனையை சுலபப்படுத்துகிறது.
- நிஞ்சாகார்ட் : 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இத்தளம் இணையதள பயன்பாட்டாளர்களுக்கானது.
- இணைய இணைப்பைப் பெறும் வாடிக்கையாளர்களை கொண்டுள்ளது.
- இத்தளத்தில் இது வணிக நிறுவனங்களுக்கு இடையிலான பரிமாற்றமாக தாமதமாக சேர்க்கப்பட்டது.

**b) மின்னாளுகை** 3

- தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆட்சிக்கான மேம்பாட்டிற்கு வழிவகுப்பதே மின் ஆளுகை என்று அழைக்கப்படுகிறது.
- எடுத்துக்காட்டு : என்ஜசி
- குடியிருப்பாளர்களுக்கான ஒரு திறன்வாய்ந்த சேவையை மின்னாளுகை வழங்குகிறது.
- சுலபமான, திறன்மிக்க முறையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறது.
- எடுத்துக்காட்டு : இ – நீதிமன்றங்கள் – தகவல்
- தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலமாக வணிக நடவடிக்கைகள், கட்டமைப்பை சுலபப்படுத்துதல் மற்றும் செயல்பாடுகளின் மாற்றங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது.
- எடுத்துக்காட்டு : இ – ஒப்பந்தங்கள்
- அரசு சேவைகள் மற்றும் செயல்பாட்டை குடிமக்களுக்கு கொண்டுபோய் சேர்ப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- அரசு மற்றும் குடிமகன்களுக்கு இடையிலான உறவை மேம்படுத்துகிறது.
- தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது.

**8) தமிழ்நாட்டில் செயல்படும் முக்கிய பெரிய அளவிலான தொழிற்சாலைகளின் பெயர்களை குறிப்பிடவும்.**

**பெரிய அளவிலான தொழிற்சாலைகள்** 6

- மிகப்பெரிய உட்கட்டமைப்பு, மூலப்பொருட்கள். அதிக மனிதவளத் தேவை மற்றும் அதிக முதலீடு ஆகியவை பெரிய அளவிலான தொழிற்சாலைகளின் அடையாங்கள் ஆகும்.
- இவ்வகையான தொழிற்சாலைகள் 10 கோடிக்கும் அதிகமான அசையா சொத்துக்களை கொண்டிருக்கும்.

**1. ஜவுளித் தொழிற்சாலை**

- மாநில அளவில் 25%ற்கும் அதிகமான பங்களிப்பை கொண்டு தமிழ்நாடு ஒரு முதன்மை பங்களிப்பாளராக திகழ்கிறது.
- பருத்தி, நூல் மற்றும் துணிகளை ஏற்றுமதி செய்கிறது.
- கோயம்புத்தூர் பகுதி தென்னிந்தியாவின் மான்செஸ்டராக அங்கீகரிக்கப்பட்டதற்கு இதுவே காரணமாகும்.

**2. சர்க்கரைத் தொழிற்சாலை**

- மொத்த சர்க்கரை உற்பத்தியில் 10%ற்கும் அதிகமான பங்களிப்பு தமிழகத்தால் வழங்கப்படுகிறது.
- தமிழகத்தில் விழுப்புரம், வேலூர், கடலூர், ஈரோடு, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் முதன்மை உற்பத்தியாளராக திகழ்கின்றன.
- தமிழகத்தில் மொத்தம் 42 சர்க்கரை உற்பத்தி அலகுகள் உள்ளன.
- இதில் 23 நிறுவனங்கள் தனியார் துறையால் 16 நிறுவனங்கள் கூட்டுறவுத் துறையாலும் மற்றும் 3 நிறுவனங்கள் பொதுத்துறையாலும் நிர்வகிக்கப்படுகிறது.

**3. காகிதத் தொழிற்சாலை**

- காகித உற்பத்தியில் ஆந்திரப்பிரதேசத்திற்கு அடுத்தபடியாக தமிழகம் இரண்டாவது இடம் வகிக்கிறது.
- காஞ்சிபுரம், பவானிசாகர், பள்ளிப்பாளையம், புகலூர், பாராமதி, வேலூர், கோயம்புத்தூர், உடுமலைபேட்டை, தொப்பம்பட்டி மற்றும் நிலக்கோட்டை ஆகியவை

முதன்மை உற்பத்தியாளராக தமிழக அளவில் விளங்குகின்றன.


4. **வாகனத் தொழிற்சாலை**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வாகன தொழிற்சாலை பெரும் பங்கினை வகிக்கிறது.
- மிகப்பெரிய அளவிலான வாகன மற்றும் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் சென்னை ஆசியாவின் டெட்ராய்டு என்று அழைக்கப்படுகிறது.
- நிகர உள்நாட்டு உற்பத்தியில் 8%ஐ தமிழ்நாடு அளிக்கிறது.
- இதில் 33% அளவிலான வணிக வாகனங்களும் மற்றும் 21% அளவிலான தனியார் வாகனங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- மொத்த உற்பத்தியில் சென்னை மட்டும் 30% வாகன உற்பத்தியும் 35% வாகன உதிரிபாக உற்பத்தியையும்தனது பங்களிப்பாக வழங்குகிறது.

**9) பேரிடர் என்பதை சுருக்கமாக விளக்குக மற்றும் இந்தியாவின் பேரிடர் வரைபடத்தைப் பற்றி விளக்குக.**

**பேரிடர்** **1**

- மனித கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட கணிக்க முடியாத உடனடி தாக்குதலை ஏற்படுத்தக்கூடிய ஒரு பேரழிவாக கருதப்பகிறது.
- எந்தவிதமான அறிவுறுத்தலும் இன்றி வாழ்வாதாரங்களுக்கும் சொத்துக்களுக்கும் அபாயகரமான அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக விவரிக்கப்படுகிறது.
- எடுத்துக்காட்டு : நிலநடுக்கம், சுனாமி, சூறாவளி, வெள்ளம் முதலியன. **5**




**10) மின் ஆளுகையுடன் தொடர்புடைய சீர்மிகு ஆளுகை என்றால் என்ன?**

- சீர்மிகு ஆளுகை என்பது எளிதான, நியாயமான, பொறுப்பான மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்ட ஒரு ஆளுகை முறையாகும். **1**
- **எளிமை :** சட்டங்கள், செயல்முறைகள் மற்றும் அரசு நடவடிக்கைகளை தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சுலபமான முறையில் மேற்கொள்கிறது. இது பயனாளர்களுக்கு இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. **5**
- **நியாயத்தன்மை :** ஊழலுக்கு எதிரான முகமைகள், காவல்துறை மற்றும் நீதித்துறையின் செயல்பாட்டு வேகத்தை அதிகப்படுத்த தொழில்நுட்ப தலையீடு தேவையாக உள்ளது.
- **இணக்கத்தன்மை :** சுலபப்படுத்தப்பட்ட கட்டமைப்பு, மேம்பாடு மற்றும் தகவல் அமைப்புகளுக்கான திறமையான மேலாண்மை செயல்பாட்டுகளை அளப்பதற்கான வழிமுறைகள் மற்றும் பொது சேவை செயல்பாடுகளுக்கான இணக்கத்தன்மை
- **பொறுப்பு :** சேவைகளின் அளிப்பு வேகத்தை அதிகப்படுத்துதல் மற்றும் தடையில்லாத வகையில் அரசுசேவைகளை மேற்கொள்தல்
- **வெளிப்படைத்தன்மை :** அரசு தரவுகள் சம்பந்தமான தகவல்களை பொதுப் பார்வைக்கு கொண்டு வருவதன்

மூலம் அரசு செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மைப் பெறுகிறது.

**11) சென்னை – கன்னியாகுமரி தொழிற் பெருவழித்தடம் திட்டம் என்றால் என்ன?**

**தொழிற்பெருவழித்தடம்** 1

- பல்வகையான போக்குவரத்து சேவைகளைக் கொண்ட ஒரு அமைப்பாக மாநிலங்களுக்கு இடையில் செயல்படுகிறது.
- பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு, தொழிற்சாலை கட்டமைப்புக்கும் இடையிலான திறமையான ஒருங்கிணைப்பாக தொழிற் பெருவழித்தடம் செயல்படுகிறது.

**அமைப்பு** 3

- சென்னை, கன்னியாகுமரி தொழிற்பெருவழித்தடம் மேற்கு வங்கத்திலிருந்து தமிழ்நாடு வரை உள்ள கிழக்குக் கடற்கரை பொருளாதார வழித்தடத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்.

**திட்டத்தின் பல்வேறு கூறுகள்**

- 60 சுத்திகரிப்பு நிலையங்களை தூத்துக்குடியில் நிறுவுதல்
- செங்கல்பட்டில் ஒரு மருத்துவ பூங்கா அமைத்தல்
- மணக்குடியில் 20 சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தல்
- தொடர் ஒற்றைச் சாளர, வலைதள அமைப்பை உருவாக்குதல்
- 15 மாநில நெடுஞ்சாலைகள் ரூ6448.24 கோடி செலவில் மேம்படுத்தப்படுதல்
- 765 கிலோவாட் மதிப்புள்ள துணை மின்நிலையம் விருதுநகரிலும், 400 கிலோவாட் துணை மின்நிலையம் ஓட்டப்பிடாரத்திலும் ரூ4987 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

**அம்சங்கள்** 2

- இவ்வழித்தடம் தமிழகத்தில் 23 மாவட்டங்களை உள்ளடக்கியது.
- உற்பத்தி, வட்டார வளர்ச்சி, தென் மாவட்டங்களின் வளர்ச்சி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

**12) உள்ளாட்சி அரசாங்க கையெடு பற்றி எழுதுக.**

**உள்ளாட்சி அரசாங்க கையேடு** 2

- இந்திய அரசு உள்ளாட்சி அரசாங்கங்களுக்கான மற்றும் நிர்வாக பகுதிகளுக்கான கையேட்டை பராமரிக்கிறது.
- இதுவே உள்ளாட்சி அரசாங்க கையேடு என்று அழைக்கப்படுகிறது.

**நோக்கம்** 1

- புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சாயத்துகள், வட்டார அமைப்புகள், மறுசீரமைப்பு செய்யப்பட்ட பஞ்சாயத்துகள், ஊரகப் பகுதிகளில் இருந்து நகரப்பகுதியாக மாறிய பகுதிகள் ஆகிய மாற்றங்கள் கையெட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இதன்மூலம் அரசு துறைகளின் செயல்பாடுகள் சுலபப்படுத்தப்படுகிறது.

**உள்ளடக்கிய தரவுகள்** 3

- அனைத்து சபைகளுடனான தொடர்பு
- வட்டார அரசுப் பகுதிகளின் புவியியல் படங்கள் மற்றும் விளக்கங்கள்
- மேயர் மற்றும் கவுன்சிலர்கள், சபைசார்ந்த உறுப்பினர்களின் விபரங்கள்
- சபைகளுக்குள் உண்டான வட்டார சட்டங்களின் நடைமுறை
- வேலைவாய்ப்பு மற்றும் சபைகளின் சேவைகள் ஆகியவை மேற்கொள்ளப்படும் சபை வலைதளங்களுக்கு தொடர்பினை ஏற்படுத்துதல்

**13) தமிழ்நாடு அரசு, சுகாதார துறையின், "பார்வை 2023" என்பது பற்றி குறிப்பு எழுதுக**

**சுகாதாரத் துறை** 1

- இலக்கு : அனைவருக்கும் சுகாதாரம்
- நோக்கம் : சமூக மேம்பாட்டில் தமிழகமே இந்திய அளவில் முதன்மை வகிக்கிறது.
- மற்ற மாநிலங்களை விட அதிக மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டை பெற்றுள்ளது.

**சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகள்** 5

- முதன்மை மற்றும் அடுத்தநிலையில் சுகாதார வலைப்பின்னல் திறனை மேம்படுத்துதல்
- ஆய்வுக்கூடங்களை அதிகப்படுத்துதல்
- படுக்கை வசதி உள்ளிட்ட மருத்துவமனை உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்
- 15 புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டு அவை மாவட்ட மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- நடைமுறையில் உள்ள 17 மருத்துவக் கல்லூரிகளும் மாவட்ட மருத்துவமனைகளும் சர்வதேச தரநிலைக்கு மேம்படுத்தப்பட்டன.
- மருத்துவ வசதிகள், கல்வி வசதி மற்றும் சரக்கு போக்குவரத்து வசதி ஆகியவற்றை ஏற்படுத்தி மாநிலத்தில் 2 மருத்துவ நகரங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பேரிடர் மேலாண்மை வசதிகள், அதிர்வு மற்றும் மீட்பு வசதிகளை மேம்படுத்துதல்
- மின்னணு முறையில் மருத்துவ தரவுகள் மற்றும் மருத்துவமனை மேலாண்மை அமைப்புகள் அனைத்து மாவட்ட மற்றும் தாலுகா மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**14) தமிழ்நாட்டின் பருத்தி ஆலைகள் முன்னேற்றத்திற்கு காரணமாக உள்ள காரணிகள் யாவை?**

**தமிழ்நாட்டின் பருத்தி ஆலைகள் முன்னேற்றத்திற்கான காரணிகள்** 4

- கால நிலை – சூடான, ஈரமான மற்றும் குறைவான காடுகளைக் கொண்ட சூழல்

SURESH'

- மூலப்பொருட்கள் – அதிக அளவிலான நிலப்பகுதிகளை கரிசல் மண், உபரி ஜவுளி உற்பத்தி
- சந்தை – அதிக தேவைகளுடனான தயார்நிலை சந்தைகள்
- பணியாளர்கள்
- அதிக அளவிலான பாதி பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்கள் உபயோகிக்கப்படுவதால் குறைந்த செலவில் அதிக உற்பத்தியை பெற முடிகிறது.

**அரசுக் கொள்கைகள்** 1

- தமிழ்நாடு புதிய ஒருங்கிணைக்கப்பட்ட ஜவுளிக்கொள்கை 2019
- நிலையான பருத்தி சாகுபடி திட்டம்

**இதர கூறுகள்** 1

- போக்குவரத்து (நான்கு வழித்தடம்)
- துறைமுகங்களை பயன்படுத்துதல் (12 இயற்கை துறைமுகங்கள்)
- மின் விநியோகம்

**15) கூட்டுறவுடன் கூடிய கூட்டாட்சி வரையறை செய்க. மேலும் அதன் தற்போதைய தேவையை குறிப்பிடுக**

**கூட்டுறவுக் கூட்டாட்சி** 1

- கூட்டுறவுக் கூட்டாட்சி என்பது விருப்பத்தின் அடிப்படையில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான பிரச்சினைகளை களைதல் மற்றும் மத்திய மற்றும் மாநில அரசின் நிலையான உறவுக்கு வழிவகுக்கிறது என்று கிராண்ட்வில் ஆஸ்டின் தெரிவிக்கிறார்.

**நன்மைகள்** 2

- **நிறுவனப்படுத்துதல் :** நிதி ஆயோக் நிறுவியதன் மூலம் அத்தனை மாநிலங்களிலும் உள்ள முதலமைச்சர்களை மத்திய அமைச்சருடன் ஒருங்கிணைத்து ஒரே கண்ணோட்டத்தில் செயல்பட வழிவகை செய்யப்படுகிறது. இதன் மூலம் கூட்டுறவுக் கூட்டாட்சிக்கான வலிமையான அடித்தளம் அமைக்கப்பட்டது.
- **நிதியியல் :** 14ஆவது நிதி ஆணையத்தின் மூலம் வரி விகிதங்களானது 42% வரை உயர்த்தப்பட்டது.
- பின்பு 15ஆவது நிதிஆணையத்தின் மூலம் மறுசீராய்வு பரிந்துரைக்கப்பட்டு ஒரு சரியான நிதி ஒருங்கிணைப்புக்கு வழிவகுத்தது.
- மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படும் ஆயுஷ்மான் பாரத் திட்டம் மற்றும் வடகிழக்கு மண்டலங்களில் உள்ள மாநிலங்களின் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான மானியங்கள் ஆகியவை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஒரு வலுவான உறவை மேற்கொள்ள உதவுகிறது.
- தீவிரவாத தாக்குதல்கள், வெள்ளம் மற்றும் நிலநடுக்கங்கள் உள்ளிட்ட இயற்கை பேரழிவுகளின் போது வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மத்திய மற்றும் மாநில அரசின் ஒருங்கிணைந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துகிறது.

**தீமைகள்** 2

- ஒரு டிரில்லியனுக்கும் அதிகமான அளவில் சமீபத்திய 2020 – 21 ஆண்டறிக்கையில் அதிகாரப் பகிர்வானது மறுக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் முகமையான சிபிஐ மற்றும் மாநில காவல்துறைக்கும் இடையிலான பிரச்சினைகள் மேலோங்குதல் (மேற்கு வங்கம் சம்பவம்)
- காவிரி நதிநீர்ப் பிரச்சினை உட்பட உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களை நதிநீர்ப்பங்கீட்டில் பின்பற்றாமல் இருப்பது.
- மாநிலங்களுக்கு இடையிலான மற்றும் மண்டல அளவில் செயல்படாத சபைகள்
- ஜிஎஸ்டி வரி இழப்பீடு, விதி 370 நீக்கப்பட்டது உள்ளிட்ட மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான பிரச்சினைகள் தொடர்ந்து எழுந்துகொண்டே உள்ளன.
- குதிரைப் பேரம், ஆளுநர் தன்னுடைய பதவியை தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவை மாநில சட்டசபை மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது. (அருணாச்சலப் பிரதேசம்)

**தீர்வுகள்** 1

- மாநிலங்களுக்கு இடையிலான சபையை ஒரு நிரந்தர அரசியலமைப்பு சார்ந்த சபையாக உருவாக்குதல் (சர்க்காரியா ஆணையம்)
- அரசியல் சாராத நபர்களை ஆளுநராக நியமித்தல் (புஞ்சிக்குழு)
- மாநிலங்களவையில் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் சமமான இடங்களை வழங்குதல்
- அரசியல் நடவடிக்கைகள் உட்பட அத்தனை செயல்பாடுகளிலும் மாநிலங்களுக்கு சமமான உரிமைகளை அளித்தல்

**16) பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கை என்றால் என்ன? அதன் முக்கியத்துவத்தை விளக்குக.**

**பாலினம் சார்ந்த நிதிநிலை** 1

- பாலின கண்ணோட்டத்தில் ஆண்டறிக்கைகளை உருவாக்கும் முயற்சியாகும்.
- இது நிதி கொள்கைகளிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும், நிதி ஒதுக்கீடுகளிலும் சமநிலையைப் பேண வழிவகுக்கிறது.

**நோக்கம்** 1

- பாலின இடைவெளி, நிதிநிலை அடிப்படையிலான பாலின பிரச்சினைகளை களைவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

**பாலின நிதிநிலை செயல்பாடுகள்** 2

- சட்டமன்றம், நிகழ்வுகள் மற்றும் திட்டங்கள் ஆகியவை பாலின அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.
- வளங்கள் பாலின அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

SURESH'

- பாலின கண்ணோட்டத்தில் செலவினங்கள் மற்றும் பொதுச் சேவை அளிப்புகள் ஆகியவை மேற்பார்வை செய்யப்படுகிறது.
- பெண்களுக்கான நிகழ்வுகள் மற்றும் திட்டங்கள் மேற்பார்வை மற்றும் தணிக்கை செய்யப்படுகிறது.
- பாலின குறைபாடுகளை களைவதற்கான சரியான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

**அம்சங்கள்** 2

- ஆண்களைப் போலவே பெண்களுக்கும் மேம்பாட்டு நன்மைகளை அளிக்கும் திட்டங்கள் தடையின்றி சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கான பலமான உபகரணமாக திகழ்கிறது.
- பெண்களுக்கான முக்கிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கான அங்கீகாரத்தினை அளிக்கிறது.
- ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலின ஏற்றத்தாழ்வுகள் குறித்த விழிப்புணர்வை அரசுக்கும் சமூகத்திற்கும் ஏற்படுத்துகிறது.
- பாலின சமத்துவம், மனிதவள மேம்பாடு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெண்கள் தாழ்த்தப்படுதலுக்கு எதிரான மற்றும் அதிகாரமளித்தலுக்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துதல்
- பெண்களின் அரசியல் நிலை, சமூக மற்றும் பொருளாதார நிலையை அதிகப்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.
- பெண்களுக்கான சமமான உரிமையை உறுதிப்படுத்துதல்
- ஆண்களுக்கு இணையான பெண்களுக்கும் பயனளிக்கும் வகையில் திட்டங்களை மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்தல்
- எடுத்துக்காட்டு : பெண்களின் பொருளதார நிலையை மேம்படுத்துவதற்கான சுகன்யா சம்ரிதி யோஜனா திட்டம்
- கல்வி, சுகாதாரம் மற்றும் பெண் பாதுகாப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகப்படுத்தம் பேடி பச்சாவோ, பேடி பதாவோ போன்ற திட்டங்கள்

**17) சிறார்களின் ஊட்டச்சத்து குறைபாட்டினை களைய தமிழ்நாட்டு அரசின் முயற்சிகளைப் பட்டியலிடுக.**

**ஊட்டச்சத்து குறைபாடு** 1

- மிகக் குறைவான அல்லது மிக அதிகமான ஊட்டச்சத்தை பெறுவதைக் குறிக்கிறது.
- இது அதீத வளர்ச்சி, கண்பார்வை குறைபாடு, இருதய நோய்கள் மற்றும் நீரிழிவு நோய் போன்றவற்றை ஏற்படுத்துகிறது.

**குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து திட்டம்** 5

- அங்கன்வாடி மையங்களில் உள்ள 2 முதல் 5 வரையிலான குழந்தைகளுக்கு அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை கொண்ட உணவு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.
- ஆரம்ப கல்வி பெறும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மேம்பாட்டிற்கான தேசிய நிகழ்வு. ஆரம்பக் கல்வி பெறும் குழந்தைகளை ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கான நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- பொது விநியோக முறை திட்டங்கள் மற்றும் தேசிய வங்கிகள் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் ஆகியவை குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து உணவு, ஆரம்பக்கல்வி, சுகாதார பரிசோதனை ஆகியவற்றை 6 வயது வரையிலான குழந்தைகளுக்கும் அவர்களின் தாயாருக்கும் வழங்குகிறது.
- பிரதான் மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் : இத்திட்டம் 6 முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகள்,கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு 1980ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**18) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு வரைக.**

**a) மூவலூர் இராமாமிர்தம் திட்டம்**

**b) நான் முதல்வன் திட்டம்**

**a) மூவலூர் இராமாமிர்தம் திட்டம்** 3

- ஆண்டு : 2022
- துறை : சமூக நல மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமைச்சகம்
- பயனாளர்கள் : 6ஆம் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு வரை படிக்கும் பெண் குழந்தைகள்
- நன்மைகள் : ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ரூ1000 வரை வழங்கப்படுகிறது.
- வேறுபெயர் : மூவலூர் இராமாமிர்தம் திட்டம் அம்மையார் உயர்கல்விக்கான உறுதித் திட்டம்

**b) நான் முதல்வன் திட்டம்** 3

- ஆண்டு : 2022
- துறை : தமிழ்நாடு திறன் மேம்பாட்டு அமைச்சகம்
- நோக்கம் : வருடத்திற்கு 1 இலட்சம் இளைஞர்களை அவர்களது திறமைகளின் அடிப்படையில் பயிற்சி வழங்குதல்
- தளங்கள் : நான் முதல்வன் மேம்பாட்டுத் தளம்
- வங்கி அறிவியல், தொழில்நுட்பத்திறன், பயிற்சி அளிக்கப்பட்ட குறியீடுகள், பிளாக் செயின் தொழில்நுட்பம்
- இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி, குறைந்த செலவில் திறன் மேம்பாட்டு மாதிரிகள்
- ரோபோட்கள் மற்றும் எந்திரங்களைப் பற்றிய கல்வியை மாணவர்களுக்கு வழங்குதல்

SURESH

அலகு - 2

**1) இந்திய நிர்வாகத்தில் தகவல் தொழில் நுட்பத்தினை பயன்படுத்துவதில் உள்ள தடைகளை ஆராய்க.**

- ஒரு சிறந்த ஆட்சியில் ஒருங்கிணைந்த பகுதியாக தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளது
- அரசு சேவைகளை துரிதப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடிமகனும் தங்களுக்கான சேவைகளைப் பெற வழிவகை செய்கிறது. **1**

**நிர்வாக செயல்பாடுகளில் தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டில் உள்ள தடைகள்** **8**

**1. உட்கட்டமைப்பு குறைபாடு**

- அத்தியாவசியத் தேவைகளான உட்கட்டமைப்பு பின்னடைவுகள்
- வலைதள இணைப்பு
- தொடர் மின் விநியோகம்
- அரசு சேவைகளை தகவல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலமாக அணுகும் வசதி கொண்ட திறன் பேசிகள்

**2. டிஜிட்டல் கல்வியறிவு குறைபாடு**

- இந்திய மக்கள்தொகையின் 90%ற்கும் அதிகமான மக்கள் இடத்தில் போதிய விழிப்புணர்வு இல்லை.
- கல்வியறிவு இல்லாத மக்களுக்கு உதவுவதாக கூறி, இடைத்தரகர்கள் இலாப நோக்கில் செயல்படுகின்றனர்.

**3. மொழித்தடை**

- பெரும்பாலான தகவல் தொழில்நுட்பத்தளங்கள் ஆங்கில மொழியிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.
- வட்டார மொழிகள் தகவல் தொழில்நுட்ப தளங்களுக்கு அப்பாற்பட்டு அமைந்துள்ளன.
- இதுவே டிஜிட்டல் முறையிலான ஆட்சி முறையை மக்களிடமிருந்து வெகு தொலைவிற்கு கொண்டு செல்கிறது.

**4. தரவுகளுக்கான அதிக செலவு**

- ஆட்சி முறையை திறன்பேசி வாயிலாக நடைமுறைப்படுத்த வங்கி உள்ளிட்ட சேவைகளை மேற்கொள்ள JAM – ( Jandhan, Aadhar and Mobile) ஆகிய உபகரணங்களை பரிந்துரைக்கிறது.
- இவற்றுக்கான செலவு இந்தியாவில் அதிகமாக உள்ளது.
- இது நிதிச்சுமையினை ஏற்படுத்துகிறது.

**5. தொழில்நுட்ப கல்வியறிவின் பின்னடைவு**

- திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் புதிய தொழில்நுட்பத்தை கையாளும் அளவிற்கு பணியாளர்கள் நியமிக்கப்படுவதில்லை.
- இது தொழில்நுட்ப அளவில் மிகப்பெரிய சவாலாக விளங்குகிறது.

**6. தொழில்நுட்பத்தை இயல்பாக பயன்படுத்த இயலாமை**

- தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பங்கள் சமூகத்தால் புரிந்து கொள்வதற்கு கடினமான செயல்முறையாக உள்ளது.

**7. வலுவற்ற இணைய வலைதள இணைப்பு**

- இந்தியாவில் உள்ள ஊரகப் பகுதிகள் வலுவற்ற வலைப்பின்னல் அமைப்பாகவும் மின் விநியோகத்தில் உள்ள பின்னடைவாலும் இணையதள இணைப்பு தொடர்ச்சியானதாக இருப்பதில்லை.
- ஆதார் வாயிலாக பணம் செலுத்தும்போது சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**8. குறைகளை களைவதற்கான அரசின் முன்னெடுப்புகள்**

- டிஜிட்டல் கல்வியறிவு : PMGDISHA போன்ற நிகழ்வுகள்
- இணைய இணைப்பு : பாரத் நெட்
- டிஜிட்டல்மயமாக்கப்பட்ட சேவைகள் : டிஜிட்டல் இந்தியா, மேக் இன் இந்தியா மற்றும் திறன் இந்தியா

**தீர்வுகள்** **3**

- பொருத்தமான உட்கட்டமைப்பை உருவாக்குதல்
- மூலதன முதலீடுகளை அதிகப்படுத்துதல்
- கட்டமைப்பு மற்றும் வடிவ மாற்றம் : அரசுத்தளங்கள் பயனாளர்களுக்கு இணக்கமான சூழலில் கட்டமைக்கப்பட வேண்டும்.
- டிஜிட்டல் கல்வியறிவு : பள்ளி அளவில் டிஜிட்டல் கல்வியறிவிற்கு முதன்மையான இடம் வழங்கப்படவேண்டும்.
- எடுத்துக்காட்டு : ஐடி கிளப், இ–கிட்ஸ்
- ஒருங்கிணைக்கப்பட்ட வட்டார மொழிகள் : அரசு வட்டார மொழிகளில் தகவல் தொழில்நுட்ப தளங்கள் மூலம் ஒருங்கிணைக்க வேண்டும்.
- இது நாடு தழுவிய அளவில் மக்களின் பயன்பாட்டை சுலபப்படுத்தும்

**2) சர்க்காரியா ஆணையம் ஏன் அமைக்கப்பட்டது? அதன் முக்கிய பரிந்துரைகள் யாவை?**

**சர்க்காரியா ஆணையம்** **2**

- ஆண்டு : 1983

**உறுப்பினர்கள் :**

- ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.எஸ்.சர்க்காரியா (தலைமை)
- ஸ்ரீ.பி. சிவராமன்
- டாக்டர் எஸ்.ஆர்.சென்

**அறிக்கை**

- 1988 (247 பரிந்துரைகளில் 180 நடைமுறைப்படுத்தப்பட்டது)

**அரசியலமைப்பிற்கான காரணங்கள்**

- மக்கள் நலனை கருத்தில் கொண்டு நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்த அதிகாரம், கடமைகள் ஆகிய கூறுகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே மாற்றங்களை பரிந்துரைக்கிறது.

SURESH

**சர்க்காரியா ஆணையத்தின் முதன்மை பரிந்துரைகள்**

**1. ஆளுநரின் பங்குகள்** 2

| ஆளுநர் நியமனம் | ஆளுநரின் நீக்கம் |
|---|---|
| ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் கட்சியைச் சார்ந்தவராக இருக்கக்கூடாது. | ஆளுநர் 5 ஆண்டுகாலம் பதவியில் நீடிக்கிறார். |
| அரசியல் பங்கெடுப்புகள் மற்றும் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கக் கூடாது. மாநிலங்களுக்கு வெளியில் பொறுப்பினை ஏற்கிறார். | பதவிக்காலங்களில் நியாயமற்ற மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரான செயல்களில் ஈடுபடும்பொழுது பதவியில் இருந்து நீக்கப்படுகிறார் |
| மாநில முதலமைச்சர் துணைக் குடியரசுத் தலைவர், சபா நாயகர் மற்றும் பிரதமரின் கலந்தாய்விற்கு பின்பே ஆளுநர் நியமிக்கப்பட வேண்டும். | ஆளுநர் நீக்க நடைமுறைகளில் மாநில அரசை மத்திய அரசு கலந்துரையாடி மாநிலத்தின் கருத்துக்களை பெற வேண்டும். |

**2. விதி 356இன் மீதான பரிந்துரைகள்** 8

- விதி 356ஐ நடைமுறைப்படுத்துவதற்கு முன் சம்பந்தப்பட்ட மாநில நிர்வாகத்துக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.
- அரசியல் ஆதாயத்திற்காக இது பயன்படுத்தப்படக் கூடாது.
- பாராளுமன்ற அனுமதியுடன் விதி 356இன்படி குடியரசுத் தலைவர் மாநிலச் சட்டமன்றங்களை கலைக்கலாம்.

**3. சட்டசபை நடவடிக்கைகளின் பரிந்துரைகள்**

- அரசியலமைப்பு விதி 258இல் பரிந்துரைக்கப்பட்டது.
- குடியரசுத் தலைவர் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கலந்துரையாடலுக்கு பின்பு முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.
- இது கூட்டாட்சியை மேம்படுத்தும்.

**4. பொதுப் பட்டியலில் பரிந்துரைகள்**

- மாநில அரசுகளின் மீது சட்டம் இயற்றுவதற்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் கலந்துரையாடிய பின்பே பொதுப்பட்டியலில் உள்ள துறைகளின் மீதே மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

**5. விதி 252இன் மீதான பரிந்துரைகள்**

- பாராளுமன்றத்தால் விதி 252 மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்பொழுது அது 3 ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும்.
- மாநிலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட சட்டங்கள் பாராளுமன்றத்தால் எந்த நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம்.

**6. மாநிலங்களுக்கு இடையிலான நீர் நிலைகளுக்கு இடையிலான பரிந்துரைகள்**

- இது மாநிலங்களுக்கு இடையிலான ஒரு தீர்ப்பால் மேற்கொள்ளப்படும் நதிநீர் பங்கீட்டு வழிமுறைகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்படலாம்.

**7. மாநிலங்களுக்கு இடையிலான சபைகள் மீதான பரிந்துரைகள்**

- விதி 263 மத்திய அரசுக்கு மாநிலங்களுக்கு இடையிலான சபைகள் அமைக்க உரிமை வழங்குகிறது.
- இந்த சபைகள் அரசியல் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக மாநில அரசுகளுக்கு இடையிலான சபைகள் என்று அழைக்கப்படுகிறது.

**8. வரி பங்கீட்டில் உள்ள பரிந்துரைகள்**

- மத்தியப் பட்டியலில் உள்ள வளங்கள், வரி அதிகாரங்கள் ஆகியவை பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.
- இந்த மாற்றங்கள் மாநிலங்களை அதிகாரப்படுத்தும் நோக்கில் குறுகிய காலத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

**3) இந்தியாவில் பொதுப்பணியாளர் தேர்வாணையத்தின் பணிகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?**

**பொதுப் பணியாளர் தேர்வாணையம்** 1

- விதி 312இன் கீழ் பாராளுமன்றம் 1 அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்திந்திய அமைப்புகளை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்காக உருவாக்கலாம்.
- இவற்றில் பணி நியமனங்கள் அனைத்தும் மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தால் மேற்கொள்ளப்படுகிறது.
- மாநில நிர்வாக பணிகளுக்காக அந்தந்த மாநிலங்களில் மாநில பொதுப் பணியாளர் தேர்வாணையம் செயல்படுகிறது.

**அரசியலமைப்பு அங்கீகாரங்கள்** 1

- விதி 320 : பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயல்பாடுகளை விளக்குகிறது.
- விதி 321 : பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் பணி நீட்டிப்பு குறித்து விளக்குகிறது.

**பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயல்பாடுகள்** 10

- தொடர்ச்சியான, நிர்வாக மற்றும் அரை சட்ட அமைப்பாகும்.

**தொடர்ச்சியான அமைப்பு**

- பணி நியமனம், பணி உயர்வு மற்றும் பணியிட மாற்றம் ஆகியவற்றில் முறையான வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்.
- மத்திய அரசு தேர்வாணையத்தின் வழிகாட்டுதல்கள் முழுமையான அறிவுறுத்தலாக பின்பற்றப்படுகிறது.

SURESH'

- விதி 320 (3)இன் படி ஒவ்வொரு தேர்வாணையமும் சம்பந்தப்பட்ட அரசுக்கு குடிமைப் பணியிடங்களை நியமனம் மற்றும் மாற்றத்தை மேற்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்க கடமைப்பட்டுள்ளது.

**நிர்வாகச் செயல்பாடுகள்**

- மத்திய மற்றும் மாநிலங்களில் பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுகள் நடத்துவதை கடமையாகக் கொண்டுள்ளது.
- அதிகளவிலான எழுத்துத் தேர்வுகளை நடத்துகிறது.
- குறிப்பிட்ட பணியிடங்களுக்காக நேர்காணல்களை நடத்துகிறது.
- முந்தைய வருடங்களுக்கு உரிய ஆண்டறிக்கையை ஆணையம் சார்பாக சமர்ப்பிக்கிறது.
- மக்களவை மற்றும் மாநிலங்களவையில் அறிக்கையானது குடியரசுத் தலைவரால் சமர்ப்பிக்கப்படுகிறார்.
- பாராளுமன்றம் தகுந்த காரணங்களுடன் தேர்வாணையங்களின் பரிந்துரைகளை நிராகரிக்கலாம்.

**அரை சட்ட அமைப்பின் செயல்பாடுகள்**

- அரசு நடவடிக்கைகளை பாதிக்கும் பணியாளர்களின் செயல்பாடுகளை கண்டிக்கிறது.
- கீழ்நிலை பணியாளர்களின் பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஆகியவற்றை கட்டுப்படுத்துகிறது.
- கட்டாய ஓய்வு, பணி நீக்கம் ஆகியவற்றை மேற்கொள்கிறது.
- ஒரு பணியாளரின் சட்ட ரீதியான செயல்பாடுகளுக்கு இழப்பீட்டான தொகை திருப்பி அளிக்கப்படுகிறது.
- கடமையை செய்வதற்கு எதிரான செயல்பாடுகள் தவிர்க்கப்படுகிறது.
- ஓய்வூதியம் மற்றும் பணியாளரின் விபத்து அல்லது காயத்திற்கான இழப்பீடு ஆகியவை விதி 320 (3) (C) ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது.

**மாநில பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் துணைச் செயல்பாடுகள்**

- சிறப்புத் தகுதிவாய்ந்த தேர்வர்களை மாநில அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த ஒரு நியமன செயல்பாடுகளை இத்தேர்வாணையம் மேற்கொள்கிறது.

**பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் பங்குகள்**

- குடிமைப் பணி மற்றும் குடிமை சேவைகளுக்கான நியமனங்களில் செயலாற்றுகின்றது.
- தேர்வர்களின் தகுதிகளுக்கு ஏற்ப அவர்களின் பணியிட மாற்றம் மற்றும் பணி நீக்கம் ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது.
- முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடும்பொழுது சம்பந்தப்பட்ட தேர்வாணையத்தால் தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.
- மாநில ஆளுநருக்கும் மத்திய அரசின் குடியரசுத் தலைவருக்கும் அறிவுறுத்தல்களை வழங்குவதை தேர்வாணையங்கள் கடமையாக கொண்டுள்ளன.

**4) DRDA குறித்து முழுமையாக தொகுத்தெழுதுக.**

**DRDA** 1

- விரிவாக்கம் : மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை
- வறுமைக்கு எதிரான நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட அளவில் ஒரு முதன்மை உறுப்பாக திகழ்கிறது.

**நிதி மூலம்** 1

- மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75 : 25 என்கிற விகிதத்தில் நிதிப் பங்களிப்பு அளிக்கப்படுகிறது.
- இதன் மூலம் DRDA வலுப்படுத்தப்படுகிறது.
- வடகிழக்கு மாநிலங்களுக்கான நிதிப்பங்கீட்டு விகிதமானது 90 : 10 என்கிற அளவில் நிதி ஆண்டு 2008 - 2009இல் மாற்றியமைக்கப்படுகிறது.

**DRDA வின் நிறுவன அமைப்பு** 4

**1. சுயவேலைவாய்ப்பு பிரிவு**

- திட்டமிடுதல், சமூக அணித்திரட்டல், கடன் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் மையங்களைக் கொண்டுள்ளது. இது ஒரு திட்ட அலுவலரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது.

**2. பெண்களுக்கான பிரிவு**

- வறுமைக்கு எதிரான நிகழ்வை மற்றும் பெண்களுக்கான பங்கெடுப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது.
- ஒவ்வொரு DRDA விலும் பெண்களுக்கான தனிப்பிரிவு அமைக்கப்படுகிறது.

**3. கூலித் தொழிலாளர்களுக்கான பிரிவு**

- திட்டமிடுதல், மேற்பார்வை மற்றும் தணிக்கை ஆகியவை ஒரு தொழில்நுட்ப பிரிவால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**4. நீர்நிலை பிரிவு**

- நீர்நிலை மேம்பாட்டு நிகழ்வு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மேம்பாடு ஆகியவற்றுக்கு பொறுப்பேற்கிறது.

**5. பொறியியல் பிரிவு**

- பொருட்களின் பயன்பாடு மற்றும் புதுமையான உற்பத்தி கண்டுபிடிப்புகளுக்கு பொறுப்பேற்கிறது.
- அனைத்துத் துறைகளிலும் உள்ள பொறியாளர்களுக்கு பயிற்சியை உறுதிப்படுத்துகிறது.

**6. வங்கிக் கணக்குப்பிரிவு**

- அமைப்புக்குள்ளான தணிக்கை

**7. மேற்பார்வை பிரிவு**

- சுதந்திரமான நிறுவனங்கள் மற்றும் அரசு சாராத அமைப்புகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களும் நிகழ்வுகளும் மேற்பார்வை செய்யப்படுகிறது.

**மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமையின் செயல்பாடுகள் 3**

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசு சாராத அமைப்புகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து மாவட்ட அளவில் வறுமை குறைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.
- வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி, ஜில்லா பரிஷத் அமைப்பிற்கு உதவுகிறது.
- ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தால் மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களை மேற்பார்வை செய்கிறது.
- பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நன்மைகளை பெறுவது குறித்த உறுதித்தன்மையை ஏற்படுத்துகிறது.
- ஊரக மேம்பாடு குறித்த விழிப்புணர்வை மேம்படுத்த அத்தியாவசிய நடைமுறைகளை கையாள்கிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை மக்களின் மீது சிறப்பு கவனம் செலுத்துகிறது.
- வறுமைக்கு எதிரான நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துவது வெளிப்படைத்தன்மையை ஊக்கப்படுத்துகிறது.
- குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒவ்வொரு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் கணக்கெடுப்பு உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளை மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து செயல்படுகிறது.
- மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி சார்ந்த படிப்புகளை முதன்மைப்படுத்துகிறது.
- ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தால் முன்மொழியப்பட்ட வறுமை குறைப்புக்கான நிகழ்வுகளில் மட்டும் கவனம் செலுத்துகிறது.

**பங்குகள் 3**

- அரசு மற்றும் அரசுசாராத. தொழில்நுட்ப மற்றும் நிதி நிறுவனங்களின் மூலம் வறுமைக் குறைப்புக்கான நிகழ்வுகளை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படுகிறது.
- முடிவெடுத்தல் உள்ளிட்ட முக்கிய செயல்பாடுகளை ஊரகப் பகுதி மக்கள் மற்றும் குறிப்பிட்ட குழுக்களை முன்னிலைப்படுத்துகிறது.
- வழிகாட்டுதல்கள், தரம், சமநிலை மற்றும் திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- திட்டங்களின் நடைமுறை நிலை குறித்த அறிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிக்கையாக அளிக்கப்படுகின்றன.

5) **மாநில தலைமை செயலகத்தின் பணிகளை விவரிக்க.**

**மாநில தலைமைச் செயலகம் 1**

- தலைமைச் செயலகம் என்பது பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்த அமைப்பாக விளங்குகிறது.
- இதன் நிர்வாகத் தலைமையாக செயலாளர்களும் அரசியல் தலைமையாக அமைச்சர்களும் விளங்குகின்றனர்.
- தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகள் நிர்வாக அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன.

**முதன்மைச் செயல்பாடுகள் 5**

- குறிப்பிட்ட கால இடைவெளியில் கொள்கை உருவாக்குதலிலும் மற்றும் கொள்கை மாற்றங்களிலும் அமைச்சர்களுக்கு துணை புரிகிறது.
- சட்டசபை பொறுப்புகளை நிறைவேற்ற துணைபுரிகிறது.
- சட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை மேற்கொள்ள உதவுகிறது.
- திட்டங்களை ஒருங்கிணைக்க. மேற்பார்வை செய்ய மற்றும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த உதவுகிறது.
- வெளியீடுகளை மறு ஆய்வு செய்கிறது.
- செலவினங்களை கட்டுப்படுத்தி நிதிநிலையை மேம்படுத்துகிறது.
- மாநில அரசுக்கும் மற்றும் மத்திய அரசுக்கும்இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது.
- நிர்வாக எந்திரம், சுமூகமாக சுழல்வதற்காக கட்டமைப்பை ஏற்படுத்துகிறது.
- சிறந்த தனிமனித மற்றும் நிறுவன கட்டமைப்பை உறுதி செய்கிறது.

**நிதி குறித்த செயல்பாடுகள் 3**

- துணை மானியங்கள், நிதி அளிப்புகள் மற்றும் திட்டமிடப்பட்ட துறைகளுக்கான நிதிகள் ஆகியவற்றை கண்காணித்து அனுமதி வழங்குகிறது.
- புதிய செலவினங்களுக்கான முன்மொழிவுகளை ஆய்வு செய்கிறது.
- ஒரு துறைசார்ந்த தலைமையால் வழங்கப்படாத நிதி ஒதுக்கீட்டை கணக்கில் கொள்கிறது.
- நெருக்கடி கால நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினங்களை கணக்கில் கொள்கிறது.
- துறைசார்ந்த தலைமை அதிகாரி மற்றும் தணிக்கை அதிகாரி உள்ளிட்டவர்களின் மறுப்பினை கடந்து தலைமை அதிகாரி குறித்த வழக்குகளை கையாள்கிறது.

**சேவை குறித்த செயல்பாடுகள் 3**

- சேவைகளுக்கான வழிமுறைகள் மற்றும் திருத்தங்களை அனுமதிக்கிறது.
- அதிகாரிகளுக்கு எதிராக உயர்மட்ட அதிகாரிகளின் பணிநியமனம், பணியிடமாற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கான ஆவணங்களைக் கையாள்கிறது.

SURESH'

- ஒரு புதிய பணியிடத்தை உருவாக்குதல், நீட்டிப்பு மற்றும் மறு நியமனம் ஆகியவை அந்தந்த துறைசார்ந்த தலைமையால் மேற்கொள்ளப்படுகிறது.
- சிறப்பு ஊதியம், சலுகைகள் உள்ளிட்ட நிதி நடவடிக்கைகளும் இதில் அடங்கும்.

**6) இந்திய கேபினட் அமைச்சரவையின் பங்கினை விவாதி.**

**கேபினட்** 1

- இது 15 முதல் 20 அமைச்சர்களைக் கொண்ட ஒரு சிறிய அமைப்பாகும்.
- கேபினட் அமைச்சர்களை மட்டும் உள்ளடக்கிய ஒரு சபை முக்கிய மையமாக விளங்குகிறது
- அரசியல் அதிகாரத்தின் உண்மையாக பணியிடமாக விளங்குகிறது.

**கேபினட் அமைச்சர்கள்** 1

- உள்ளாட்சி, கல்வி, நிதி, வேளாண்மை உள்ளிட்ட முக்கியத் துறைகளை கேபினட் அமைச்சர்கள் மேற்பார்வை செய்கின்றனர்.
- கேபினட் உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்துகொண்டு முடிவுகள் எடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.
- ஆவணங்கள் இல்லாமல் ஒரு முதன்மையான பங்கினை வகிக்கும் சுதந்திரமான அதிகாரம் பெற்ற நபராக அமைச்சகத்தின் தலைவர் விளங்குகின்றார்.
- பொதுவாக இவருக்கு துணை அமைச்சர் அல்லது மாநில அமைச்சர் அல்லது இருவரும் துணை செய்கின்றனர்.

**44ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் 1978** 1

- விதி 352இன் கீழ் இது சேர்க்கப்பட்டது.
- அரசியலமைப்பின் உண்மையான பிரதியில் கேபினட் என்ற வார்த்தை காணப்படவில்லை.
- முதன்மையான அமைச்சர்களைக் கொண்டு ஒரு சபையாக கேபினட் அமைத்து விளங்குவதாக விதி 352 விளக்குகிறது.
- அவர்களின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகளை விளக்காமல் அவர்கள் நியமிக்கப்படுவதை விதி 75 விளக்குகிறது.

**கேபினட்டின் பங்குகள்** 9

- அரசியல் மற்றும் நிர்வாக அமைப்பில் முடிவுகளை மேற்கொள்ளும் ஒரு முக்கியமான அமைப்பாக விளங்குகிறது.
- மத்திய அரசில் முதன்மையாக கொள்கை வடிவமைப்பாளராக விளங்குகிறது.
- மத்திய அரசின் முதன்மை நிர்வாக அதிகார மையமாக விளங்குகிறது.
- மத்திய அரசின் நிர்வாக முதன்மை ஒருங்கிணைப்பாளராக விளங்குகிறது
- குடியரசுத் தலைவருக்கு அறிவுறுத்தும் குழுவாக செயல்பட்டு அதன் முடிவுகள் ஒரு சட்டரீதியான வெளியீடாகக் கருதப்படுகிறது.
- பேரழிவுகளை எதிர்கொள்வதற்காக ஒரு மேலாளர் நியமிக்கப்படுகிறார்.
- அவரே நெருக்கடி காலங்களில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பினை ஏற்கிறார்.
- சட்டமன்றம் மற்றும் நிதிசார்ந்த பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்கு உதவுகிறது.
- அரசியல் அதிகாரி மற்றும் மூத்த தலைமைச் செயலக அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்ட நியமனங்களை மேற்கொள்கிறது.
- வெளிநாட்டு கொள்கை மற்றும் வெளிநாட்டு உறவுகளுக்கு பொறுப்பு வகிக்கிறது.

**7) இந்தியாவின் பல்வேறு தொழிற்சாலை தொகுப்புகள் பற்றி எழுதுக.**

**தொழிற்சாலை தொகுப்புகள்** 12

- பிரிவுகள் மற்றும் புவியியல் ரீதியாக குறு மற்றும் சிறு நிறுவனங்களை விளக்குகிறது.
- இவை பொதுவான வாய்ப்புகள் மற்றும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.
- வெளியில் இருந்து பெறப்படும் பொருளாதார அளவை அதிகப்படுத்துகிறது. (எ.கா : மூலப்பொருட்களின் சிறப்பு விற்பனையாளர் ஒரு பிரிவில் உள்ள திறன்வாய்ந்த பணியாளர்)
- நெருக்கடி காலங்களில் உதவும் தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் நிதி ஆகியத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள்.

**முதன்மை தொழிற்சாலை தொகுப்புகள்**

- ஹூக்ளி தொழிற்சாலை பகுதிகள்
- மும்பை – புனே தொழிற்சாலை மண்டலங்கள்
- அகமதாபாத் – வதோதரா பகுதிகள்
- மதுரை – கோயம்புத்தூர்
- பெங்களூர் பகுதிகள்
- சோட்டாநாக்பூர் பீடபூமி பகுதிகள்
- ஆக்ரா – மதுரா – மீரட் – சகரன்பூர்
- ஃபரிதாபாத் – குர்கான் – அம்பாலா பகுதிகள்

**கீழ்க்கண்ட கூறுகள் தொழிற்சாலைமயமாக்குவதற்கு உதவுகிறது**

**ஹூக்ளி தொழிற்சாலைப் பகுதிகள்**

- 1773லிருந்து 1911 வரை கல்கத்தா, பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரமாக விளங்குகிறது.
- இது அந்நகரின்மீது ஒரு தொடர் முதலீட்டை உறுதிசெய்தது.
- அசாம் மற்றும் பெங்கால் பகுதிகளில் தேயிலை உற்பத்தி அதிகமாக நடைபெறுகிறது.
- அதற்கு முன்பு இண்டிகோ மற்றும் சணல் பயிர்கள் அதிகமாக விளைவிக்கப்பட்டது.
- சோட்டாநாக்பூர் பீடபூமிப் பகுதிகளில் நிலக்கரி மற்றும் இரும்பு தாது உற்பத்தி தொழிற்சாலை மேம்பாட்டுக்கு உதவியது.

SURESH'

- அதிக மக்கள் தொகை மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களைக் கொண்ட பகுதிகளில் குறைவான ஊதியத்தில் அதிக பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.
- இது பீகார், ஒரிசா மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்களில் சாத்தியப்படுகிறது.

**மும்பை – தானே தொழிற்சாலை மண்டலங்கள்**

- நர்மதா மற்றும் தப்தி ஆகிய ஆற்றுப்படுகைகளை அதிகமாக கரிசல் மண்ணிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்கள்
- எடுத்துக்காட்டு : பருத்தி-நெசவு மற்றும் விதைகளை பிரிப்பதற்கான ஈரமான கடற்கரை காலநிலை
- மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து அதிகமாகப் பெறப்படும் காற்று உற்பத்தி
- மேற்கத்திய சந்தைகளை எளிதில் அணுகும்படியான மேற்கு கடற்கரை துறைமுகங்கள்
- துறைமுகங்கள் வாயிலாக நிறைய முதலீட்டு பொருட்கள் சுலபமாக இறக்குமதி செய்யப்படுகிறது.

**அகமதாபாத் – வதோதரா பகுதிகள்**

- குஜராத் மாநிலப் பகுதிகளில் இருந்து பருத்தி விளையும் நிலப்பகுதிகள் இதில் அடங்கும்.
- வதோதரா மற்றும் அங்கலேஷ்வர் பகுதிகளில் உள்ள பெட்ரோல் மற்றும் வேதி நிறுவனங்கள் காம்பே வளைகுடாவில் எண்ணெய் கண்டுபிடிப்பிற்குப் பிறகு அதிகமான வளர்ச்சியை எட்டியது.
- காண்ட்லா துறைமுகம் முக்கியமான நன்மையாக விளங்குகிறது.
- அதிக மக்கள்தொகையைக் கொண்ட வடபகுதிகள் சுமூகமான சந்தைக்கு வழிவகை செய்கிறது.
- தற்போது அந்த மண்டலங்கள் டீசல் என்ஜின்கள், துணி எந்திரங்கள், மருந்தகங்கள் மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் என்று பல்வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**மதுரை – கோயம்புத்தூர் – பெங்களூர் பகுதிகள்**

- முதன்மையாக பருத்தி மற்றும் கரும்பு விளையும் பகுதி

**காரணங்கள்**

- பைகாரா, பாபநாசம். சிவசமுத்திரம், சாராவதி மற்றும் மேட்டூர் ஆகிய பகுதிகளில் இருந்து பெறப்படும் நீர்மின்சக்தி
- பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் இந்த பகுதிகளில் அமைந்துள்ளது.

1. ஹிந்துஸ்தான் எந்திர உற்பத்தி, விஸ்வேஸ்வராயா
2. இரும்பு மற்றும் எஃகு வேலைப்பாடுகள், பாரத் எலக்ட்ரானிக்ஸ்
3. பெல் நிறுவனம்
4. இந்திய தொலைபேசி நிறுவனம்
5. ஹிந்துஸ்தான் விமான உற்பத்தி

- மதுரை, சிவகாசி, திருச்சிராப்பள்ளி, பெங்களூர், மாண்டியா. மேட்டூர், மைசூர் மற்றும் கோயம்புத்தூர் போன்ற தொழிற்சாலை மையங்கள் இப்பகுதிகளில் அமைந்துள்ளன.

**சோட்டாநாக்பூர் பீடபூமிப்பகுதிகள்**

- பீகார் மற்றும் ஒரிசா பகுதிகளில் நிலக்கரி மற்றும் இரும்பு கண்டுபிடிப்பு தொழிற்சாலை வளர்ச்சி ஏற்படுத்தியது.
- தாமோதர் பள்ளத்தாக்கு சுலபமாக கிடைக்கும் மின் விநியோகம் மற்றும் நிலக்கரி அடிப்படையிலான மின்திட்டங்கள் ஆகியவை தொழிற்சாலை மயமாக்குவதற்கு பெரிதும் உதவியது.
- பீகார், ஒரிசா மற்றும் கிழக்கு உத்திரப்பிரதேசத்தில் குறைவான ஊதியத்தில் பணியாளர்கள் கிடைப்பது முதன்மை நன்மையாக விளங்குகிறது.
- துறைமுகம் மற்றும் சந்தைகளில் துரித அணுகுதல் இப்பகுதியில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது.

**ஆக்ரா – மதுரா – மீரட் – சகரன்பூர் மற்றும் ஃபரிதாபாத் – குர்கான் – அம்பாலா பகுதிகள்**

- ஆக்ரா : கண்ணாடி வேலைப்பாடுகள், இரும்பு தளங்கள், தோல் பொருட்கள்
- மதுரா : எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் உயிரி வேதிப் பொருட்கள்
- பரிதாபாத் : பொறியியல் மற்றும் மின்னணுப் பொருட்கள்
- சகரன்பூர் , யமுனா நகர் : காகிதத் தொழிற்சாலை
- மீரட் : சர்க்கரை உற்பத்தி

**8) குடிமைப்பணி தகுதி கொண்ட ஒரு ஊழியர் மீது பொதுப் பணியாளர் தேர்வாணையங்கள் எடுக்கும் ஒழுங்கு நடவடிக்கைபடி முறைகளை சரியாக வரிசைப்படுத்தி எழுதுக.**

**பொதுப் பணியாளர் தேர்வாணையம்** 1

- விதி 312இன் கீழ் பாராளுமன்றமானது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு தேவையான அனைத்திந்திய பணிகளை உருவாக்குகின்றனர்.
- இப்பணியிடங்களுக்குத் தேவையான அனைத்து நியமனங்கள் மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தால் மேற்கொள்ளப்படுகிறது
- மாநில அளவில் உள்ள நிர்வாகப் பணியிடங்களுக்கு மாநிலப் பொதுப் பணியாளர் தேர்வாணையம் பணியிடங்களை நிரப்புகிறது.

**அரசியலமைப்பு விதிகள்** 1

- விதி 320 : பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயல்பாடுகளை விளக்குகிறது.
- விதி 321 : பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயல்பாட்டு அதிகாரத்தை நீட்டிக்கிறது.

**ஒழுங்கு நடவடிக்கைகள்** 1

- கண்டனம்
- ஊதிய உயர்வை நிறுத்திவைத்தல்
- பதவி உயர்வை நிறுத்திவைத்தல்
- பணமதிப்பிழப்பை மீட்டல்
- தரநிலையை குறைத்தல்

- கட்டாய ஓய்வு
- சேவைகளை நீக்குதல்
- சேவை நிராகரிப்பு

**பொதுப் பணியாளர்களுக்கான நடவடிக்கைகள் கீழ்க்கண்ட படிநிலைகளை உள்ளடக்கியுள்ளது. 9**

- அரசுப் பணியாளர்களுக்கு எதிரான புகார்களை பதிவு செய்தல்
- முதன்மை விசாரணையை மேற்கொள்ளுதல்
- முதன்மை விசாரணையின் அறிக்கையை சம்பந்தபட்ட அதிகாரிக்கு அனுப்புதல்
- குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட முதன்மை அதிகாரியின் மூலமாக அனுப்புதல்
- பணியாளரின் பதிலை பிரகடனப்படுத்துதல்
- சம்பந்தப்பட்ட பணியாளரின் பதில் திருப்தி அளிக்காத பொழுது அவருக்கு பதில் சம்மன் அனுப்புதல்
- பணியாளர்கள் இறுதியாக கொடுக்கும் பதில்
- பெறப்பட்ட காரணங்களை குறிப்பிட்ட அதிகாரி மேற்பார்வை செய்கிறார்.
- விசாரணைக்கான அதிகாரியை நியமித்தல், அதாவது தொடர் விசாரணை மற்றும் நியமன அதிகாரியாக நியமித்தல்
- சட்டரீதியாக பாதுகாப்பளித்தல்
- சாட்சிகளின் வருகை பதிவேடு
- விசாரணை அதிகாரியின் அறிக்கையை சமர்ப்பித்தல்
- அதற்கான சம்மனை சம்பந்தப்பட்ட பணியாளருக்கு அனுப்புதல்
- விசாரணை தொடங்கியதில் இருந்து அத்தனை தரவுகளையும் ஒருங்கிணைத்தல்
- அபராத முன்மொழிவுகள்
- இறுதி ஆணை

9) **“தமிழ்நாடு அரசின் மின்னாளுகைக் கொள்கை”-யின் சிறப்பு இயல்புகளை வெளிக்கொணர்க. 12**

- தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினை ஆட்சி முறையில் செயல்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு ஒரு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.
- மின்னாளுகை பல்வேறு திட்டங்களில் வெற்ஷீகரமாக தேசிய மின்னாளுகை திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழக அரசில் மின்னாளுகை கொள்கையின் கூறுகள்**

- மாநில தரவு மையம்
- மெய்நிகர் மற்றும் கிளவுட் உட்கட்டமைப்பு
- பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகில் உள்ள மீட்பு மையங்கள்
- தமிழ்நாடு மாநில விரிவு பகுதி வலைப்பின்னல்
- தேசிய அறிவுசார் வலைப்பின்னல்
- தேசிய ஒளியியல் வலைப்பின்னல்
- மாநில குடியிருப்பாளர் தரவுகளுக்கான மையம்
- டிஜிட்டல் கையொப்பம்
- மின்னஞ்சல் மற்றும் மின்னஞ்சல் கொள்கை

**மாநில தரவு மையம்**

- மின்னணு சேவைகளை திறமையான முறையில் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பல்வேறு செயல்பாடுகளை மாநில தரவுமையம் சுலபப்படுத்துகிறது.
- மாநில தகவல் தொழில்நுட்ப களஞ்சியம்
- பாதுகாப்பான தரவு சேவையை வழங்குகிறது.
- வலைதள சேவைகள்
- மாநிலத்திற்கான தளம் மற்றும் மாநில சேவைகளுக்கான சிறப்புப் பகுதி

**மெய்நிகர் மற்றும் கிளவுட் உட்கட்டமைப்பு**

- வேகமான, துரிதமான மற்றும் செலவு குறைவான ஒரு செயல்பாடுகளை ஏற்கனவே நடைமுறையில் உள்ள கணினிகளில் மேற்கொள்ள மெய்நிகர் மற்றும் கிளவுட் உட்கட்டமைப்பு உதவுகிறது. மேலும் இது தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவுகிறது

**பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகில் உள்ள மீட்பு மையங்கள்**

- இம்மையங்களை நிறுவுவதன் மூலம் அரசுத் துறைகளுக்குத் தேவையான தரவுகளை மீட்டெடுக்க முடியும்.

**தமிழ்நாடு மாநில விரிவு பகுதி வலைப்பின்னல்**

- மாநிலத் தலைமையகங்களுக்கும், மாவட்டத் தலைமையகங்களுக்கும், தாலுகா மற்றும் வட்டார அரசுகளுக்கும் இடையில் ஒரு வலுவான தொடர்பை ஏற்படுத்த உதவுகிறது.

**தேசிய அறிவுசார் வலைப்பின்னல்**

- நாட்டில் உள்ள அறிவுசார் கல்வி நிறுவனங்களுக்கு ஒரு ஒருங்கிணைந்த அதிவேக வலைப்பின்னலை ஏற்படுத்தித் தருகிறது.

**தேசிய ஒளியியல் வலைப்பின்னல்**

- இந்தியாவில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் இணைய சேவையை நோக்கமாகக் கொண்டது.
- தமிழ்நெட் திட்டம் இந்தியாவில் ஒவ்வொரு ஊரக, நகர்ப்புற, மாவட்ட, மாநில தலைமையகங்களுக்கு ஒரு தடையற்ற இணைப்பை ஏற்படுத்துகிறது.

**மாநில குடியிருப்பாளர் தரவுகளுக்கான மையம்**

- ஆதார் இணைப்புடன் கூடிய ஒரு மையப்படுத்தப்பட்ட தரவு அமைப்பை ஏற்படுத்துகிறது.
- மக்கள்தொகை சார்ந்த ஒரு மதிப்புமிக்க தரவு வளமாக இது விளங்குகிறது.

**டிஜிட்டல் கையொப்பம்**

- மின்னணு பரிமாற்றங்களில் அடையாளம் காணுதல் மற்றும் முறையான அங்கீகாரத்திற்கான டிஜிட்டல் கையொப்பமுறை பின்பற்றப்படுகிறது.

**மின்னஞ்சல் மற்றும் மின்னஞ்சல் கொள்கை**

- ஒவ்வொரு அரசுப் பணியாளருக்கும் ஒரு தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி அவர்களது பதவிகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.
- குறிப்பிட்ட பணிக்காக ஒரு தனி மின்னஞ்சல் கொள்கை பின்பற்றப்படுகிறது.

**10) தலசுய ஆட்சி சந்திக்கும் மிகப்பெரிய சிக்கல்கள் மற்றும் சவால்களை விவரி.**

**தலசுய ஆட்சி சந்திக்கும் சிக்கல்கள் மற்றும் சவால்கள்**

**1. அதிகாரப் பகிர்வில் பின்னடைவு** **10.5**

- உள்ளாட்சி அரசாங்கங்கங்கள் அரசியலமைப்பைப் பொறுத்தவரை எந்தவிதமான தனிஉரிமையும் கொடுக்கப்படவில்லை.
- மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் விருப்புரிமை அடிப்படையில் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2. சில முக்கிய இனங்கள்**

- எரிபொருள் மற்றும் தீவனம்
- வழக்கத்திற்கு மாறான ஆற்றல்மூலங்கள்
- மின்சார விநியோகம் மற்றும் ஊரக மின்மயமாக்குதல்
- முறையற்ற கல்வி
- உணவு பதப்படுத்தும் நிறுவனம் உட்பட குறு நிறுவனங்கள்
- தொழில்நுட்ப பயிற்சி
- மாநிலங்களில் வழங்கப்படக்கூடிய தொழில்சார்ந்த கல்வி

**3. தன்னிறைவற்ற மானியங்கள் / நிதிகள்**

- பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ளும் முயற்சிகளில் உள்ளாட்சி அரசாங்கங்கள் நிதிசார்ந்த பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.
- பணியிட மாற்றங்கள் மாநில நிதி ஆணையத்தின் மூலம் பெரும்பாலான மாநிலங்களில் மேற்கொள்ளப் படுகின்றனர்.

**4. சர்பன்ச்பதி முறையில் உள்ள பிரச்சினைகள்**

- 2015ஆம் ஆண்டு பஞ்சாயத்து ராஜ் நாளில் பிரதமர் இதனை அறிவித்தார்.
- சமூக ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கும் பெண்களின் கல்வியறிவை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமாக இது அறிவிக்கப்பட்டது.

**5. உட்கட்டமைப்பு சவால்கள்**

- பள்ளிகளுக்கும் அங்கன்வாடி மையங்களுக்கும் சொந்தமான கட்டிடங்கள் ஏதும் இல்லை
- சொந்த கட்டிடங்கள் உள்ள பகுதிகளிலும் அடிப்படை வசதிகளான கழிவறை, குடிநீர் மற்றும் மின் இணைப்புகள் இருப்பதில்லை.

**6. பணியாளர் பற்றாக்குறை**

- பஞ்சாயத்து அளவில் குறைவான அளவில் உள்ள உதவிப் பணியாளர்கள், செயலாளர்கள், இளநிலை பொறியாளர்கள், கணினி இயக்குபவர்கள் ஆகிய பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.
- இது சேவைகளை அளிப்பதிலும் நடைமுறைகளிலும் தாமதத்தை ஏற்படுத்துகிறது.

**7. பல்வேறு அரசுத் திட்டங்களை ஒன்ஷ்ணைத்தலின் உள்ள பின்னடைவு**

- மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை ஒன்றிணைத்தலின் உள்ள பின்னடைவு நடவடிக்கைகளில் தாமதத்தை ஏற்படுத்துகிறது.
- பல்வேறு துறைகள் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெவ்வேறு வழிகாட்டுதல்கள் முக்கிய தடையாக விளங்குகிறது.

**வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்** **1.5**

- **உயர் தன்னாட்சி :** விரைவான சேவையை அளிப்பதற்காக தங்களது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் தன்னிச்சையான முடிவுகளைக் கொண்ட ஒரு தன்னாட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.
- **தேர்தல் மற்றும் பணி அமர்த்துதல் :** குறைந்தபட்ச அளவிலான பணியாளர்களை பணியமர்த்துவதன் மூலம் அரசு நடவடிக்கைகளானது துரிதப்படுத்தப்படுகிறது.
- வட்டார அரசுகளுக்கான தேர்தல்கள் தாமதப்படும்பொழுது அதற்கான நடவடிக்கைகள் 6 மாதங்களுக்கு மேல் தாமதமாகிறது.
- **பொது மற்றும் தனியார் பங்களிப்பை ஊக்கப்படுத்துதல் :** ஊரக மேம்பாட்டுக்கான நிதியினை ஈட்டுவதற்காக மாநில மற்றும் வட்டார அளவில் இந்த நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- தனியார் துறை முதலீடுகளை அதிகப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு சூழலை உருவாக்கும் நோக்கில் மாநில அரசு செயல்பட வேண்டும்.
- **நிதி கூட்டாட்சியை உறுதிப்படுத்துதல் :** வட்டார அரசுகள் எதிர்கொள்ளும் நீண்டகால பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்வாக நிதி வளத்துடன்கூடிய ஒரு தன்னாட்சி அமைப்பின் துணை தேவையாக உள்ளது. இதனை உயர்மட்ட அரசுகள் வட்டார அரசுகளுக்கு வழங்க வேண்டும்.
- **திறன்வாய்ந்த தணிக்கை :** வட்டார அரசுகளில் உள்ள அதிகார பதவி வகிப்பவர்கள் முறையான செயல்பாடு மற்றும் அதனைச் சார்ந்த சட்டங்களுக்கு உட்பட்டு தொடர் கட்டுப்பாடு மேற்கொள்ள இது உதவிகரமாக அமைகிறது.

**11) தமிழ்நாட்டின் பேரிடர் வரைபடத்தை வரைக.**

- தமிழ்நாடு மாநிலம் அதனுடைய இயற்கை பேரிடர்கள் குறித்த தெளிவான உணர்திறனைக் கொண்டது.

**சூறாவளி** 12

- வடகிழக்கு பருவக்காலத்தில் வங்காள விரிகுடா கடற்கரைப் பகுதியில் ஏற்படும் சூறாவளியானது தமிழ்நாட்டின் வெப்பமண்டலப் பகுதிகளை பெரிதும் தாக்குகிறது.
- வெள்ள அபாயம் வாழ்வாதாரத்தை இழத்தல் ஆகிய நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடந்து வருகிறது.
- சூறாவளி தாக்கும் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- மிக அதிகம், அதிகம், சராசரி, குறைவு மற்றும் மிகக் குறைவு மண்டலங்கள்

**கடற்கரை வெள்ளம்**

- வடகிழக்கு பருவக்காற்று காலங்களில் கடற்கரை மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுவது பொதுவான நிகழ்வாகும்.
- சமீபத்தில் தமிழகம் 2015இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது.
- 2004இல் ஏற்பட்ட சுனாமி பேரழிவுக்குப் பின்பு கஜா புயலே தமிழகம் சந்தித்த மிகப்பெரிய பேரிடர் ஆகும்.
- இது கடற்கரை மாவட்டங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வேளாண்மையை பெரிதும் பாதித்தது.

**நிலநடுக்கம்**

- இந்தியாவில் பல்வேறு காலகட்டங்களில் நிறைய நிலநடுக்கங்களை எதிர்கொண்டுள்ளது.
- பொதுவாக நாட்டின் அதிக நிலநடுக்க அபாயத்தை சந்திக்கும் பகுதிகள் வடக்கு மற்றும் மத்திய இந்தியா பகுதிகளில் அமைந்துள்ளது.
- நிலநடுக்கத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மிகக் குறைவான அபாயத்தை எதிர்கொள்கிறது.

**சுனாமி**

- சுனாமி இந்தியாவில் இதுவரை சந்திக்கப்படாத பேரழிவாகும்.
- 2004இல் சுனாமி தாக்கம் நாட்டிற்கும் மாநில அளவிலும் அனைத்துத் தளங்களிலும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**நிலச்சரிவு**

- தமிழ்நாட்டில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டமே அதிகப்படியான நிலச்சரிவை சந்திக்கும் மாநிலமாக அடையாளம் காணப்பட்டது.
- கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி மலை ஆகியவை நிலச்சரிவுகளால் பாதிக்கப்படும் இதர இடங்கள் ஆகும்.

**வெப்ப அலை**

- பொதுவாக இவை மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் ஏற்படும்.
- அதிகப்படியான வெப்பத்தால் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றமாக கருதப்படுகிறது.
- இவை காலநிலைகளில் இயற்பியல் ரீதியான மாற்றங்களையும் இறப்பையும் ஏற்படுத்தக்கூடியதாகும்.
- வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு,கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனீ, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிகப்படியான வெப்ப அலை தாக்கத்தை சந்திக்கும் மாவட்டங்களாகும்.

**12) மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில் 1990இல் நிறுவப்பட்டது. அச்சபையின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை வெளிக்கொணர்க.**

**மாநிலங்களுக்கு இடையிலான சபை** 2

- மாநில மற்றும் மத்திய அரசுகளின் ஒற்றுமையையும் மாநிலங்களுக்கு இடையிலான உறவையும் வலுப்படுத்த இச்சபை உருவாக்கப்பட்டுள்ளது.
- அரசியலமைப்பு விதி 131இன் படி மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உச்சநீதிமன்றம் அதிகாரம் பெறுகிறது.
- விதி 262இன் படி மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பிரச்சினைகள் ஆகியவற்றிற்கு தீர்வு காணப்படுகிறது.
- மாநிலங்களுக்கு இடையிலான நிர்வாக அமைப்புகளின் பிரச்சினைகளை விசாரிக்க மற்றும் பரிந்துரைகளை வழங்க விதி 263 வழிவகை செய்கிறது.

**திட்டம்** 2

- பொது சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை ஊக்கப்படுத்துவதற்கான வேலைப்பாடுகளை மேற்கொள்ள ஒரு திறன்வாய்ந்த அமைப்பாக விளங்குகிறது.

**நோக்கம்** 8

- தனிமனித கல்வி, வாடிக்கையாளரின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் ஒரு தேசிய மையமாக விளங்குகிறது.
- தேசிய மற்றும் சர்வதேச அளவில் பணியாளர்கள் அல்லது ஊழியர்களை அணிதிரட்டக்கூடிய ஒரு அமைப்பாகவும் மற்றும் வேலைத்திறனை ஊக்கப்படுத்தும் அமைப்பாகவும் விளங்குகிறது.
- இராணுவம் மற்றும் படைவீரர்கள் மூலமாக வேலையில் ஈடுபடுவதற்கான ஒரு நிலையான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது.
- பரவலாக்கப்பட்ட மக்கள் தொகையில் அழகு சாதனவியல், அழகுப்படுத்துதல் உள்ளிட்ட தொழில்சார்ந்த திறன்களின் அடிப்படையில் வேலையில் ஈடுபடுவதை அதிகப்படுத்துகிறது.
- தொழில்சார்ந்த மற்றும் அழகுசாதனவியல் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அழகுசாதனவியல் தொடர்பான படிப்பு மற்றும் துறைகளை வழிகாட்டுதல்கள் மற்றும் மதிப்பிடல்கள் மூலம் எழுத்து, செயல்முறை, தேர்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்கிறது.

அலகு - 3

**1) இந்திய குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை கீழ்க்கண்ட குறிப்புகளில் கீழ் விவாதி : நிர்வாக அதிகாரங்கள், சட்டமன்ற அதிகாரங்கள், நீதி தொடர்பான அதிகாரங்கள், நிதி தொடர்பான அதிகாரங்கள், வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் தூதரக அதிகாரங்கள், நெருக்கடி நிலை தொடர்பான அதிகாரங்கள், நெருக்கடி நிலை அறிவித்தல் மற்றும் இன்ன பிற அதிகாரங்கள், போன்றவைகள் பற்றி கலந்துரையாடுக.**

**இந்திய குடியரசுத் தலைவரின் அதிகாரங்களும் செயல்பாடுகளும்** 1


**முன்னுரை**

- இந்திய நாட்டின் தலைமையாக குடியரசுத் தலைவர் விளங்குகிறார்.
- இவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார்.
- இந்தியாவின் ஒற்றுமை, நேர்மை ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகிறார்

**குடியரசுத் தலைவர்**

- விதி 52 இந்தியாவிற்கு குடியரசுத் தலைவர் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.
- பகுதி V - விதி 52 - 78
- தற்போதுள்ள குடியரசுத்தலைவர் - திரௌபதி முர்மு (15ஆவது குடியரசுத் தலைவர்)

**இந்திய குடியரசுத் தலைவரின் அதிகாரங்களும் செயல்பாடுகளும்** 14




**1. நிர்வாக அதிகாரங்கள் : விதி 53**

- அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் இவரது பெயரிலேயே மேற்கொள்ளப்படும்.
- கீழ்க்கண்டவர்களை இவர் நியமிக்கிறார்.

1. விதி 75 - பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்களை நியமிக்கிறார்.
2. விதி 76 - இந்திய அரசின் தலைமை சட்ட அதிகாரி
3. விதி 148 - தலைமை கணக்குத் தணிக்கையாளர்
4. விதி 280 - நிதி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

- விதி 263இன்படி மாநிலங்களுக்கு இடையிலான சபைகளை உருவாக்குகிறார்.

**2. சட்டமன்ற அதிகாரம்**

- விதி 85 : மாநில சட்டசபையை கலைப்பதற்கான சம்மனை வழங்குகிறார்
- விதி 108 : பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறார்.

**முக்கியமான நியமனங்கள்**

- மக்களவை சபாநாயகர்
- மாநிலங்களவையின் தலைமை

**நியமன அதிகாரங்கள்**

- மாநிலங்களவையில் 12 உறுப்பினர்கள்
- மக்களவையில் 2 ஆங்கிலோ இந்தியர்கள்

**முன் அனுமதி பெறும் மசோதாக்கள்**

- பண மசோதா விதி 110
- மாநில எல்லையை உருவாக்குதல் அல்லது மாற்ஷியமைத்தல்

**3. நிதி அதிகாரங்கள்**

- நிதி மசோதா : குடியரசுத் தலைவரிடமிருந்து பரிந்துரைகள் வழங்கப்படுகிறது.
- நிதி அறிக்கையின் அறிமுகம் விதி 112
- இந்தியாவின் தொகுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பரிமாற்றங்கள் விதி 267
- 5 வருடத்திற்கு ஒருமுறை நிதி ஆணையங்களை ஏற்படுத்துதல் விதி 280

**4. நீதி அதிகாரங்கள்**

- உச்சநீதிமன்றம் குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்குகிறது விதி 143
- விதி 72 மன்னிக்கும் அதிகாரங்களை வழங்குகிறது.

1. மன்னிப்பு
2. விலக்கு
3. ஓய்வு
4. நிவாரணம்
5. பயணம்

**5. வெளியுறவு இராஜதந்திர அதிகாரங்கள்**

- சர்வதேச மையங்களில் இந்தியாவை முன்னிறுத்துதல்
- பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் குடியரசுத்தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்படும்.

**6. நெருக்கடி கால அதிகாரங்கள்**

- குடியரசுத் தலைவரின் பெயரில் மூன்று விதமான நெருக்கடி காலங்கள் அறிவிக்கப்படுகிறது.
- தேசிய நெருக்கடி விதி 352.
- குடியரசுத் தலைவர் ஆட்சி விதி 356 மற்றும் 365
- நிதி நெருக்கடி விதி 360

**7. இதர அதிகாரங்கள்**

- இந்தியாவின் பாதுகாப்புப் படையின் முதன்மை வழிகாட்டியாக விளங்குகிறார்.
- முப்படைகளின் தலைமை தளபதிகளை நியமிக்கிறார்.
- மக்களவையின் நம்பிக்கையை பெறாதபொழுது அமைச்சரவையை கலைக்கிறார்.

**முடிவுரை**

- அரசியல் ஒற்றுமையும் மற்றும் அரசியலமைப்பின் அதிகாரத்தையும் உறுதிப்படுத்தும் ஒரு பதவியை குடியரசுத் தலைவர் வகிக்கிறார்.
- இவர் நாட்டின் மிக முக்கியமான அம்சமாக விளங்குகிறார்.

**2) மாவட்ட ஆட்சியரின் பல்வேறு நிர்வாகப் பணிகளை விளக்குக.**

**மாவட்ட ஆட்சியரின் பல்வேறு நிர்வாகப் பணிகள்** 1

- மாவட்ட அளவில் நிர்வாக அமைப்பின் தலைமையாக விளங்குகிறார். மாவட்டத்தின் மாநில அரசுக்கான முகவராக விளங்குகிறார்.
- மாவட்ட நிர்வாக தலைமை பதவி 1772ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்கால் உருவாக்கப்பட்டது

**1. வருவாய் நிர்வாகம்** 3

- மாவட்ட ஆட்சியர்
- மாவட்ட நிர்வாக அதிகாரி

**2. சட்ட ஒழுங்கு, நிர்வாகம்**

- மாவட்ட நீதிபதி

**3. மேம்பாட்டு நிர்வாகம்**

- மாவட்ட மேம்பாட்டு அதிகாரி
- மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு

**4. மாவட்ட பாதுகாப்பு**

- நெருக்கடி கால நிர்வாகத்தை மேற்கொள்ளும் தலைமை

**5. மாவட்டத் தேர்தல் மற்றும் மேலாண்மை**

- பொறுப்பு அதிகாரி
- மாவட்ட கணக்கெடுப்பு அதிகாரி

**வருவாய் நிர்வாக அதிகாரி** 2

**மாவட்ட ஆட்சியர்**

- நில வருவாயை வசூலித்தல்
- தக்காவி கடன்கள் வழங்குதல் மற்றும் வசூலித்தல்
- ஊரக கணக்கெடுப்பை மேற்கொள்ளுதல்
- நில ஆவணங்களை பாதுகாத்தல்

**மாவட்ட நிர்வாக அதிகாரி** 3

- கருவூல நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்
- முத்திரைத்தாள் கடமைகளை செயல்படுத்துதல்
- புனர்வாழ்வு மானியங்கள்
- துணைப்பிரிவு மற்றும் தாசில்தார் தலைமையகங்கள்
- மாவட்ட தலைமை நெறிமுறை அதிகாரி

**சட்ட ஒழுங்கு நிர்வாகம்**

**மாவட்ட நீதிபதி**

- காவல்துறை மற்றும் சிறைச்சாலையை மேற்பார்வையிடுதல்
- பட்டியலின மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சான்றளித்தல்
- சிறப்பு குற்றப்பிரிவு அதிகாரத்தின்கீழ் குற்றத்தடுப்பு முறைக்கான பாதுகாப்பு சம்மன் வழங்குதல்
- 144 (அ) CrPC பிரிவின்கீழ் ஆணைகளை வழங்குதல்

**மேம்பாட்டு நிர்வாகம்** 3

**மாவட்ட மேம்பாட்டு அதிகாரி**

- மேம்பாட்டுக்கான வேலைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை ஏற்கிறார்.
- பொது சுகாதாரத் துறை, நீர்ப்பாசனம், காடுகள், வேளாண்மை மற்றும் குடும்ப நலன்சார்ந்த நிகழ்வுகளை ஆராய்கிறார்.

**மாவட்ட ஒருங்கிணைப்பு**

- செயல்பாட்டு ஒருங்கிணைப்பு
- வருவாய்
- பொது நிர்வாகத் துறை
- பத்திரப் பதிவு

**மாவட்ட பாதுகாப்பு** 3

**நெருக்கடி மேலாண்மை அதிகாரி**

- மாவட்ட பேரிடர் மேலாண்மைக் குழுவின் தலைமையாக விளங்குகிறார்.
- பேரிடரின் அபாய தணிப்பு நடவடிக்கைக்கான திட்டங்களை வடிவமைக்கிறார்.
- புனர்வாழ்வுக்கான பாதுகாப்பு மற்றும் தீர்வுக்கு துணை செய்தல்

**மாவட்ட தேர்தல் மற்றும் மேலாண்மைபொறுப்பு அதிகாரி**

- தேர்தல் பங்களிப்புகளை புதுப்பித்தல் மற்றும் உருவாக்குதல்
- நியாயமான தேர்தலை நெறிப்படுத்துதல்

**மாவட்ட கணக்கெடுப்பு அதிகாரி**

- 10 வருடங்களுக்கு ஒரு முறை கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- கணக்கெடுப்புக்கான பணியாளர்களை நியமித்தல்

**3) மாநில நிர்வாகத்தில் முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் பணிகளை விவரிப்பதுடன் ஏன் அவர் "மாநில அரசின் உண்மையான தலைவர்" என அழைக்கப்படுகிறார் என்பதனை விளக்குக.**

**மாநில முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்**


**முன்னுரை** 1

- மாநிலத்தின் உண்மையான நிர்வாக அதிகாரியாகவும் மற்றும் மாநில அரசின் தலைமையாகவும் முதலமைச்சர் விளங்குகிறார்.

**முதலமைச்சர்**

- விதி 164 - 167
- பகுதி VI
- விதி 167 - முதலமைச்சரின் செயல்பாடுகளை விவரிக்கிறது.
- தற்போதைய தமிழக முதலமைச்சர் திரு.ஸ்டாலின் கருணாநிதி

**மாநில முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்** 1




**அமைச்சரவையுடனான தொடர்பு** 2

- முதலமைச்சரால் பரிந்துரைக்கப்பட்ட அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
- அமைச்சர்களுக்கான துறைகளை ஒதுக்கீடு அல்லது மாற்றியமைக்கும் அதிகாரத்தைப் பெறுகிறார்.
- அமைச்சரை ராஜினாமா செய்யச்செய்யவோ அல்லது அமைச்சரை பணிநீக்கம் செய்ய ஆளுநருக்கு பரிந்துரைகளை வழங்கவும் செய்கிறார்.
- அமைச்சரவை கூட்டங்களுக்கு தலைமை வகிக்கிறார்.
- அனைத்து அமைச்சர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றை வழிகாட்டி மேற்பார்வை செய்கிறார்.

**ஆளுநருடனான உறவுகள்** 2

- விதி 167 ஆளுநருக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்புப் பாலமாக முதலமைச்சரை விவரிக்கிறது.

**ஆளுநருடனான தொடர்புகள்** 2

- நிர்வாகம் தொடர்பான அமைச்சரவையின் முடிவுகள்
- சட்டமன்ற முன்மொழிவுகள் மற்றும் தகவல்கள்
- ஆளுநர் அமைச்சரவையின் முடிவுகளுக்கு ஏற்ப செயல்படுகிறார். ஆனால் தனி ஒரு அமைச்சரின் முடிவுகளை பின்பற்றுவதில்லை.

**மாநில சட்டமன்றத்துடனான தொடர்பு** 2

- சட்டமன்றத்தை கூட்டுவதற்கான அறிவுறுத்தல்களை ஆளுநருக்கு வழங்குகிறார்.
- மாநில சட்டமன்றத்தை கலைப்பதற்கான பரிந்துரைகளை வழங்குகிறார்.
- சட்டசபையில் அரசுக் கொள்கைகளை அறிவிக்கிறார்.

**மற்றவை** 2

- மாநில திட்ட வாரியத்தின் தலைமை
- உறுப்பினர் :

1. மாநிலங்களுக்கு இடையிலான சபை
2. நிதி ஆயோக் நிர்வாக சபை

- மாநில அரசின் முதன்மை பேச்சாளராக விளங்குகிறார்.
- நெருக்கடி கால நிலைகளில் மாநிலத்தின் அரசியல் தலைமையாக விளங்குகிறார்.

**மாநிலத்தின் உண்மையான தலைவர்** 2

- மாநிலத்தின் பெரும்பான்மை வாக்கினைப் பெற்ற கட்சியைச் சார்ந்தவராக உள்ளார்.
- அமைச்சர்களை தேர்ந்தெடுக்கவும் மற்றும் ஆளுநருக்கு பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் கொண்டவராவார்.
- அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்யவும் மாற்றவும் அதிகாரம் பெறுகிறார்.
- அரசு திட்டங்களை ஒருங்கிணைக்கும் அதிகாரம் பெற்றவராவார்.
- அனைத்துத் துறைகளையும் மேற்பார்வை செய்கிறார்.
- அனைத்து முக்கிய நிர்வாக முடிவுகளும் இவரால் மேற்கொள்ளப்படுவதால் மாநிலத்தின் உண்மையான தலைவர் என்று அழைக்கப்படுகிறார்.

**முடிவுரை** 1

- மாநில நிர்வாகத்தின் மிக முக்கியமான பதவியை முதலமைச்சர் வகிக்கிறார்.
- ஆளுநரின் விருப்ப அதிகாரத்தின் அடிப்படையில் முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் தகுதிகள் ஆகியவை மாநில நிர்வாகத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

4) **தமிழக அரசின் பேரிடர் மேலாண்மை அமைப்பினை விரிவாக விளக்குக.**

**தமிழக அரசின் பேரிடர் மேலாண்மை அமைப்பு**

**பேரிடர்** 1


- பேரழிவுகள், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் ஆகியவை 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின்கீழ் கையாளப்படுகிறது.

**பேரிடர் மேலாண்மை** 2

- திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் ஆகிய தொடர்ச்சியான தீர்வுக்குரிய செயல்பாடுகள் ஆகும்.

1. தடுப்பு
2. தணிப்பு
3. திறன்வளர்ப்பு
4. முன்னேற்பாடு
5. பாதுகாப்பு மற்றும் மீட்பு
6. புனர்வாழ்வு மற்றும் மறுகட்டமைப்பு

**தமிழ்நாடு அரசின் அமைப்பு**



**தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை அதிகாரம்** **6**

- பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005இன் கீழ் அமைக்கப்பட்டது
- தலைமை : தலைமைச் செயலாளர்

1. வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு துறை
2. மாநில பேரிடர் மேலாண்மை படை
3. மாநில பேரிடர் மேலாண்மை நிதி

**1. வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு துறை**

- அத்தியாவசிய வசதிகளை செய்துத் தருகிறது.
- ஒரு துணை அமைப்பை ஏற்படுத்துகிறது.
- மனித திறன் வளர்த்தலை ஏற்படுத்துகிறது.

**2. மாநில பேரிடர் மேலாண்மை படை**

- இடம் : ஆவடி
- பேரிடர் காலங்களில் செயல்படுகிறது.
- சிறந்த வழிகாட்டுதல்கள் மற்றும் முறையான மருந்து வசதிகளை பேரிடர் காலங்களில் அளிக்கிறது.
- நெருக்கடி காலங்களில் மருத்துவமனை செயல்பாடுகளை வலுப்படுத்துகிறது.

**3. மாநில பேரிடர் மேலாண்மை நிதி**

- பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005இன் கீழ் பிரிவு 48(C)யில் விளக்கப்பட்டுள்ளது.
- தொழிற்சாலை சார்ந்த பேரிடர்கள் ஏற்படும்பொழுது அதற்கான பொறுப்புகளை சம்பந்தபட்ட அலகுகளே ஏற்கின்றன.

**மாவட்ட பேரிடர் மேலாண்மை அதிகாரி**

- இதன் அதிகாரங்களும் செயல்பாடுகளும் மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005இன் கீழ் பிரிவு 30இல் விவரிக்கப்பட்டுள்ளது.
- தலைமை : மாவட்ட ஆட்சியர்
- கிராம அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களை வகுக்கிறார்.


**நிர்வாகம்**

- தேசிய மற்றும் மாநில அதிகார மையங்களில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் அரசு, அரசுசாராத மற்றும் தன்னார்வ குழுக்களின் உதவியுடன் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது.

**செயல்பாடுகள்** **6**

- விழிப்புணர்ச்சியை உருவாக்குதல், பயிற்சி மற்றும் செய்முறைப் பயிற்சிகள் ஆகியவை அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் மூலம் பல நிகழ்வுகள் மாவட்ட பேரிடர் மேலாண்மை அதிகாரியால் மேற்கொள்ளப்படுகிறது.

**மாவட்ட அளவில் பேரிடர் மேலாண்மை செயல்பாடுகள்**




**5) நிர்வாக சீர்திருத்தம் என்றால் என்ன? மைய மற்றும் மாநில அரசுகளில் பல்வேறு நிர்வாக சீர்திருத்த குழுக்களை குறிப்பிடுவதோடு அதன் முக்கியத்துவத்தையும் எழுதுக.**

**நிர்வாக சீர்திருத்தம்** **3**

- பொருளாதாரவியலாளர் கூற்றுப்படி, நிர்வாக அமைப்பின் முறைகளை மாற்றம் செய்து அதன் இலக்கு மற்றும் தரம் திறன் மேம்பாடு ஆகியவற்றில் முழுமையான மாற்றங்களை அதிகார மையத்தின் முயற்சியால் மேற்கொள்வதாகும்.

**பல்வேறு மத்திய மற்றும் மாநில நிர்வாக சீர்திருத்தங்கள்** **12**

- கர்மயோகி திட்டம்
- குடிமைப் பணியாளர்களின் திறன் வளர்ப்புக்கான தேசிய திட்டமாகும்.
- குடிமைப் பணியாளர்களின் திறன் மற்றும் அறிவுசார்ந்த மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது

**இ-சமிக்ஷா**

- அரசு முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளை வலைதளம் வாயிலாக பின்பற்றும் ஒரு திட்டமாகும்.
- டிஜிட்டல் முறையில் பணியாளர்களின் செயல்பாடுகளை கண்காணித்தல்

**இ- அலுவலகம்**

- திறன்வாய்ந்த முடிவெடுத்தல் திறன் மற்றும் காகிதங்கள் அற்ற அலுவலகத்தை உருவாக்கும் நோக்கமாக கொண்டது.

**சிறந்த ஆட்சிக்கான குறியீடு**

- மாநில அரசின் சொத்துக்களை உள்ளடக்கியது.-மாநில அரசின் கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு அந்தஸ்தை ஆராய்கிறது.

**மின்னாளுகைக்கான தேசிய மாநாடு**

- அரசை பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள், தொழிற்சாலை ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருடன் ஒன்றிணைத்து முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் ஒரு மின்னாளுகை நடவடிக்கை தளமாகும்.

**பொதுமக்களின் குறைகளை மேற்பார்வை செய்யும் மையப்படுத்தப்பட்ட அமைப்பு**

- எந்த புவியியல் பகுதியிலும் குறைகளை அறியும் அமைப்பு.
- பொதுமக்கள் குறைதீர்க்கும் குறிப்பிட்ட துறையால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

**தகவல் அறியும் உரிமை**

- அரசின் எந்த அலுவலகத்தில் இருந்தும் தகவல்களைப் பெற குடிமக்களுக்கு உரிமை உண்டு.
- தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**சேவைகளுக்கான உரிமை**

- அரசு அலுவலகங்களுக்கு சேவைகளை செயல்படுத்துவதற்கான கால வரையறை வழங்கப்பட்டுள்ளது.
- இந்த காலவரையறை கடக்கப்படும்போது அபராதங்கள் விதிக்கப்படும்.

**லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா**

- அரசியல், நிர்வாகம் மற்றும் அதிகாரத்துவ அமைப்புகளில் ஊழலை தடுப்பதற்காக அமைக்கப்பட்ட நிறுவனமாகும்.
- ஊழலுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்துகிறது.


**6) நிதி ஆயோக் என்பது இந்திய அரசின் முதன்மை வாய்ந்த கொள்கை "சிந்தனை கூடம்" ஆகும். இந்நிறுவனம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான இலக்கு மற்றும் கொள்கை உள்ளீடுகள் மற்றுமல்லாது தொழில்நுட்பம் தொடர்புடைய ஆலோசனை வழங்குகிறது. விளங்குக.**

**நிதி ஆயோக் அரசின் சிந்தனைக் கூடம்**

**நிதி ஆயோக்** 2

- இந்தியாவை மாற்றுவதற்கான ஒரு தேசிய நிறுவனமாகும்.
- ஜனவரி 1, 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- திட்டக்குழுவை தொடர்ந்து உருவாக்கப்பட்டது.
- செயல்பாட்டு பங்களிப்பு காரணமாக சிந்தனைக்கூடம் என்று அழைக்கப்படுகிறது.
- கூட்டுறவு கூட்டாட்சி கருத்தாக்கத்தின் பகுதியாக செயல்படுகிறது.

**இந்தியாவின் சிந்தனைக்கூடம்** 1




**கொள்கை உள்ளீடுகள்** 3

- வேளாண்மை மேம்பாட்டிற்கான பணிக்குழு
- இயற்கை உரங்களை ஊக்கப்படுத்துவதற்கான பணிக்குழு
- நிதி – வடகிழக்கு பகுதிகளுக்கான மையம்
- சத் – இ
- இ-அம்ரித் தளம்

**குறியீடு**

- சுகாதாரம்
- மாவட்ட மருத்துவமனை
- சிறந்த ஆட்சி
- புதிய இந்தியாவுக்கான திட்டமிடல்
- இந்தியாவின் நிலையான மேம்பாட்டுக்கான இலக்குகள்

**வழிகாட்டுதலுக்கான உள்ளீடுகள்** 3

- மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இணைப்புப் பாலமாக விளங்கும் டீம் இந்தியா முகமை
- அறிவுசார்ந்த மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கான மையமாக விளங்கும் நிதிஆயோக் சிந்தனைக்கூடம்
- மூன்று ஆவணங்கள்

1. 3 ஆண்டுகளுக்கான செயல்பாட்டு நிரல்
2. 7 ஆண்டுகளுக்கான சராசரி வியூக அறிக்கை
3. 15 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு ஆவணம்

**தொழில்நுட்ப உதவி** 3

- நிதி ஆயோக் என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அளவில் ஒரு குறிப்பிட்ட துறையாக விளங்குகிறது.
- கீழ்க்கண்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வு மற்றும் அமைப்புகளை உள்ளடக்கியது.

1. அறிவியல் மற்றும் தொழிற்சாலை ஆராய்ச்சிக்கான சபை
2. விண்வெளித்துறை
3. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்
4. புவி அறிவியல் அமைச்சகம்
5. அணு ஆற்றலுக்கான துறை

- டிஜிட்டல் இந்தியா திட்டத்தில் உள்ளீடு மற்றும் வெளியீடுகளின் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மை ஆராயப்படுகிறது.
- கட்டமைப்பு

1. இந்தியாவின் புதுமைகளுக்கான குறியீடு
2. உட்கட்டமைப்பு செயல்பாடு

**<u>சமீபத்திய சாதனைகள்</u>** 1

- இயற்கை வேளாண்மைக்கான பூஜ்ய நிதிநிலை
- பரம்பராகத் கிரிஷி விகாஸ் யோஜனா
- தான்ய லட்சுமி கிராம சேமிப்புத் திட்டம்


**<u>முடிவுரை</u>** 2

- மத்திய மற்றும் மாநில அரசுகளின் அமைச்சகத்துடன் ஒன்றுபட்ட, ஒருங்கிணைந்த கலந்தாய்வினை நிதி ஆயோக் மேற்கொள்கிறது.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் கருத்துக்களை கணக்கில்கொண்டு அதற்கான திட்டத்தை வடிவமைத்து நடைமுறைப்படுத்துகிறது.
- சிறந்த ஆட்சிக்கான தேவைகளை சுலபமான முறையில் உருவாக்குகிறது.
- மக்களை பங்கெடுக்கச் செய்து கொள்கை வாயிலான ஒரு வெளிப்படைத் தன்மையை நிலைநாட்டுகிறது.
- வெளியீடுகளை நோக்கமாகக் கொண்ட சிறந்த மேம்பாட்டுச் செயல்பாடுகளை, வழிகாட்டுதல்களை வழங்குகிறது.
- புதுமையான எண்ணங்கள் மற்றும் திட்டங்களை பாதுகாத்து நடைமுறைப்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நிதி ஆயோக் செயல்படுகிறது.

**7) மகளிர் நலன் பேண தமிழக அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களைப் பட்டியலிடுக.**

**<u>மகளிர் நலனுக்கான தமிழக அரசின் திட்டங்கள்</u>** 1

- சுகாதாரம், குடிமை வசதிகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட ஜனநாயக உரிமைகள் மகளிருக்கு கிடைக்கும் வகையில் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மகளிருக்கான இலவச உதவி எண் : 181




**<u>திருமண உதவித் திட்டங்கள்</u>** 4

**1. <u>ஈ.வெ.ரா.மணியம்மை நினைவு விதவை திருமண உதவிச் சட்டம் 1981</u>**

- 8 கிராம் தங்கம் + 50000 ரொக்கம் –பட்டதாரி
- 8 கிராம் தங்கம் + 25000 ரொக்கம் – பட்டதாரி அல்லாதவர்கள்

**2. <u>ஆதரவற்ற பெண்களுக்கான அன்னைதெரசா நினைவு திருமண உதவித் திட்டம் 1984</u>**

- 8 கிராம் தங்கம் + 50000 ரொக்கம் – பட்டதாரி
- 8 கிராம் தங்கம் + 25000 ரொக்கம் – பட்டதாரி அல்லாதவர்கள்

**3. <u>டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண உதவித் திட்டம் 1975</u>**

- 15000 + 10000 (பத்திரம்) + 8 கிராம் தங்கம் – பட்டதாரி
- 30000 + 20000 (பத்திரம்) + 8 கிராம் தங்கம் – பட்டதாரி அல்லாதவர்கள்

**4. <u>டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கலப்புத் திருமண உதவித் திட்டம்</u>**

- 30000 + 20000 (பத்திரம்) + 8 கிராம் தங்கம் – பட்டதாரி
- 15000 + 10000 (பத்திரம்) + 8 கிராம் தங்கம் – பட்டதாரி அல்லாதவர்கள்

**<u>பொருளாதார அளவில் அதிகாரமளித்தல்</u>** 5

**1. <u>சத்தியவாணி முத்து அம்மையார் இலவச தையல் எந்திரத் திட்டம் 1977</u>**

- விதவைகளுக்கான இலவச தையல் எந்திரங்கள் வழங்கப்படும் திட்டமாகும்

**2. <u>அம்மா இருசக்கர வாகனத் திட்டம் 2018</u>**

- அரசு 50% மானியங்களை அல்லது வாகனங்களை வாங்குவதற்காக 25000 உதவித்தொகையை அளிக்கிறது.

**3. <u>மகிளா சம்ரிதி யோஜனா 1993</u>**

- பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண் தொழில்முனைவோருக்கு குறு நிதி அளித்து உதவுகிறது.
- திறன் மேம்பாட்டு பயிற்சியை அளிக்கிறது.

**4. <u>ஸ்வயம் சித்தா 2001</u>**

- சுயஉதவிக் குழுக்களை அமைத்தல்
- தையல், எம்பிராய்டரி உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**5. <u>பாலின நிதிநிலை அறிக்கை 2005</u>**

- திரு.பி.சிதம்பரம் அவர்களால் அளிக்கப்பட்டது.
- பாலின கண்ணோட்டத்தில் கட்டமைக்கப்பட்டது.

1. திட்டமிடுதல்
2. நிதிநிலை
3. கொள்கை நடைமுறைப்படுத்துதல்

**<u>சுகாதாரம்</u>** 5

**1. <u>ஜனனி சுரக்ஷா யோஜனா 2005</u>**

- குழந்தை இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு மரணத்தை குறைக்கிறது.
- நிறுவனம் சார்ந்த செயல்பாடுகளுக்காக ரூ1400 வழங்கப்படுகிறது.

**2. <u>பிரதான் மந்திரி சுரக்ஷா மாத்ரித்வ அபியான்</u>**

- தொடர்ச்சியான குழந்தை பிறப்புக்கு முந்தைய பராமரிப்பிற்கு உதவுகிறது.
- முழுவதும் இலவசமாக வழங்கப்படுகிறது.

**3. <u>ஜனனி சிசு சுரக்ஷா கார்யகிரம் 2011</u>**

- சி – பிரிவு உட்பட இலவச சிகிச்சை
- சுகாதார வசதிகளுடன் கூடிய இலவச போக்குவரத்து வசதி

**4. குழந்தைபெற்ற பெண்களுக்கான பெட்டகம்**

- குழந்தை பராமரிப்பு பொருட்கள்
- பாலிக் அமிலம், விட்டமின் D மற்றும் தாய்க்கான மாத்திரைகள்

**8) இந்திய உச்ச நீதிமன்றத்தின் அமைப்பினை விவரி மற்றும் தேசிய நீதித்துறை பணிகளுக்கான ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி வெளிக்கொணர்க.**

**உச்சநீதிமன்றம்** **0.5**

- இந்தியாவின் இறுதி நீதிமன்றமாகவும் உச்ச அதிகாரம் கொண்ட நீதிமன்றமாகவும்விளங்குகிறது.
- 28.01.1950ஆம் நாள் உருவாக்கப்பட்டது.
- விதி 124 - 147 பகுதி V இன் கீழ் விவரிக்கப்படுகிறது.
- ஒரு உச்சநீதிமன்றம் இருக்க வேண்டும் என்று விதி 124 (1) விவரிக்கிறது.

**உச்சநீதிமன்றத்திற்கான நிறுவன அமைப்பு**

**அமைப்பு** **10.5**

- 31 நீதிபதிகள் (1+30)
- ஒரு தலைமை நீதிபதி (திரு.சரத் அரவிந்த் போப்டே)

**நீதிபதிகளின் நியமனம்**

- குடியரசுத் தலைவரால் மேற்கொள்ளப்படுகிறது.
- உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்வின் மூலம் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.
- இதர நீதிபதிகள் உச்சநீதிமன்ற தலைமைநீதிபதி மற்றும் இதர நீதிபதிகளின் கலந்தாய்வின் கீழ் நியமிக்கப்படுகிறார்.

**தகுதிகள்**

- இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.
- உயர்நீதிமன்றத்தில் 5 வருடம் நீதிபதியாக பணியாற்றி இருக்க வேண்டும்.
- உயர்நீதிமன்றத்தில் 10 வருடம் வழக்குரைஞராக பணியாற்றி இருக்க வேண்டும்.
- நிதித்துறையில் சிறந்து விளங்க வேண்டும்.
- மேற்கண்ட மூன்று தகுகளில் ஏதாவது ஒன்றினை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**பதவிக்காலம்**

- 65 வயது
- குடியரசுத் தலைவரிடம் கடிதத்தை அளித்து எந்நேரமும் ராஜினாமா செய்யலாம்.
- பாராளுமன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குடியரசுத் தலைவரால் நீக்கப்படலாம்.

**நீக்கம்**

- நீதிபதிகளுக்கான விசாரணை சட்டம் 1968இன் படி
- மக்களவையில் 100 உறுப்பினர்களும் மற்றும் மாநிலங்களவையில் 50 உறுப்பினர்களும் ஒப்புதல் தெரிவிக்கும்பொழுது நீக்கப்படுகிறார்.
- சபா நாயகர் / தலைமை இதனை ஆமோதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.
- மூன்று நபர்களைக் கொண்ட குழுக்களால் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.
- குற்றம் நிரூபிக்கப்படும்பொழுது நாடாளுமன்ற இரு அவைகளாலும் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
- குடியரசுத் தலைவர் நீக்கத்திற்கான ஆணையை பிறப்பிக்கிறார்

**மாற்று தலைமை நீதிபதி (விதி 126)**

- தலைமை நீதிபதி பதவி காலியாக இருக்கும்பொழுது
- தற்காலிக விடுப்பில் உள்ள பொழுது
- தன்னுடைய கடமைகளை நீதிபதி செய்ய இயலாதபொழுது

**தற்காலிக நீதிபதிகள்(விதி 127)**

- நிரந்தர நீதிபதிகளின் பணி பற்றாக்குறையை நிறைவு செய்கிறது
- உயர்நீதிமன்றங்களுக்கு உச்சநீதிமன்ற நீதிபதி நியமிக்கிறார்

**ஊதியங்கள் மற்றும் சலுகைகள்**

- பாராளுமன்றத்தின் முடிவுகளுக்கு ஏற்ப அமைகிறது.
- நிதி நெருக்கடி காலங்களில் மாற்றத்திற்கு உரியது.
- ஊதியத்தில் 50%ஐ ஓய்வுதியமாக பெறுகின்றனர்.

**தேசிய நீதி நியமன ஆணையம்**

- கொலிஜியம் அமைப்பை மாற்றுவதற்கான ஒரு அரசமைப்பு அமைப்பாகும்.
- நிதி 124 A - 99ஆவது சட்டத்திருத்தம்

**நடைமுறைகள்**

- கீழ்க்கண்ட நியமனங்களில் பின்பற்றப்பட வேண்டும்.

1. இந்திய தலைமை நீதிபதி
2. உச்சநீதிமன்றத்தின் மற்ற நீதிபதிகள்
3. உயர்நீதிமன்றத்தின் தலைமை மற்றும் இதர நீதிபதிகள்

**முக்கியத்துவம்** **4**

- விரிவான பார்வை கொண்ட மையம்
- உயர் சட்ட அதிகாரிகளை தேர்ந்தெடுப்பதில் பங்களிப்பதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.
- ஊழல் மற்றும் அரசியல் தலையீடு அற்ற நிர்வாக மற்றும் நீதிபதி நியமனத்தில் செயலாற்றுகிறது.

**அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்**

- தேசிய நீதி நியமன ஆணையம் நீதிபதிகளின் நியமனம் மற்றும் பணிமாறுதலுக்கு பொறுப்பேற்கிறது.
- இது கொலிஜயம் அமைப்பிற்கு மாற்றாக உருவாக்கப்பட்டது.
- உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் பெற்ற ஆணையமாக விளங்குகிறது.
- அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 99இன் மூலம் விதி 124 A இணைக்கப்பட்டுள்ளது.
- இந்த மசோதா உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும்பொழுது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுதல்களை தெளிவாக வரையறை செய்துள்ளது.

SURESH'